When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத வூ வைகாசி மீ 07 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 25 (21 - 05 - 1990 UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 91

# எந்த நேரத்திலும் எம்மீது யுத்தம் திணிக்கப்படலாம்!

## கேணல் ராதா நினைவுக் கூட்டத்தில் அரசியற்பொறுப்பாளர் டொமினிக் உரை

யாழ்ப்பாணம், மே 21

எந்த நேரத்திலும், யுத்தம் எம்மீது திணிக்கப்படக் கூடும். அவ்வாறு யுத்தம் திணிக்கப்படுமானால் நாம் அதனை எதிர்த்து முறியடிப்போம்.

இவ்வாறு நேற்றிரவு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக்.

கேணல் ராதாவின் மூன்றாவது ஆண்டு நினைவுக் கூட்டம் நேற்று இரவு வண்ணார் பண்ணை, ஐயனார் கோவில் வீதியில் நடைபெற்றது. அங்கு பேசுகையிலேயே திரு. டொமினிக் முன்கண்டவாறு சொன்னார்.

ஆனையிறவில் படைகள் குவிக்கப்படுவதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். பிரதேசப் பொறுப்பாளர் திரு. பொன்மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டத்தில் திரு. ஸ்டான்லி டொமினிக் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இன்றுள்ள நெருக்கடியான சூழ்நிலையை நோக்குமிடத்து எந்த நிமிடத்திலும் யுத்தம் எம்மீது திணிக்கப்படக் கூடும். அப்படி எம்மீது யுத்தம் திணிக்கப்பட்டால் இந்தியப் படையை வெளியேற்றியதுபோல் ஸ்ரீலங்காவின் யுத்தத்தையும் முறியடிப்போம். அதற்கு, இதுவரை தம் இன்னுயிர் ஈந்த எமது 1,500 தியாகிகளின் பலமும் உறுதியும் எமக்கு ஊன்றுகோலாக, உரமூட்டுவதாக அமைந்துள்ளன.

எமது இயக்க வரலாற்றில் 1,500 போராளின் தியாகத்தைப்பற்றி ஆராயவேண்டும். அப்போதுதான் அவர்களின் சுயநலமில்லாத தியாகத்தை உணரமுடியும்.

அவர்களின் தியாகத்தின் மத்தியில் எமது போராட்டம் தொடர்கிறது. இன்றுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் அவர்கள் தந்த மனப்பலம்,

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் இன்று விடுவிப்பு?

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு பி. சந்திரசேகரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் பிணையில் விடுவிக்கப்படுவதைப் பொலீஸார் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று பொலீஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை--

திரு. சந்திரசேகரனை விடுவிக்கக் கோரி தலவாக்கலை கதிரேசன் ஆலய முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்திருக்கும் இருபது பேரும் நேற்று மாலை வரை தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இன்று திரு. சந்திரசேகரன், விடுவிக்கப்படாவிட்டால் மலையகத்தில் பரந்த அளவில் போராட்டம் நடத்த பல தொழிற்சங்கங்கள் முஸ்தீபு செய்து வருகின்றன.

திரு சந்திரசேகரன் கடந்த 15ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ-3)

### சுப நேரம்

21- 5 - 90

திங்கட்கிழமை வைகாசி 07

சுபநேரம் ;

11.52 -01. 22

இராகுகாலம்

07 22 - 08.52

### முச்சந்தி முரளி



உந்த விதத்திலை எண்டாலும் வாத்திமார் லீவு எடுக்கிறதைக் குறைக்கலாம் எண்டு யோசிக்கினம் எண்டு சொல்லுங்கோ பின்னை......!

## தமிழர் பிரதேசம் எங்கும் இன்று பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணம், மே 21

மலையகத் தமிழர்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் அடக்குமுறையைக் கண்டித்து இன்று ஈழத் தமிழர் பிரதேசம் எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

ஈரோஸ் இயக்கம் உட்பட பல வெகுஜன அமைப்புகள் இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருக்கின்றன.

ஹர்த்தால் காரணமாக தமிழர் பிரதேசத்தில் அத்தியாவசிய சுகாதார சேவைகளைத் தவிர ஏனைய செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்படும். பாடசாலைகள், ரியூட்டரிகள் இயங்கமாட்டா. மினி பஸ் மற்றும் இ.போ.ச. சேவைகள் நடைபெறமாட்டா. தனியார் வாகனங்களும் வீதியில் ஓடித்திரிய மாட்டா. படக்காட்சிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. [உ-3]

### இந்திய தூதுவருக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே 21

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மொஹ்ஹோத்திராவுக்கு புதிய பதவி வழங்கப்படுகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சில் கிழக்குப் பிராந்திய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரிவின் செயலாளராக இவர் பதவி உயர்வு பெறுகிறார்.

இலங்கைக்கான புதிய இந்தியத்தூதர் யார் என்பதுஇன்னும் தீர்மானிக்கப்படவில்லை. (எ)

### சூடானில் பூமியதிர்ச்சி

கார்ட்டும், மே 21

சூடானின் தெற்குப் பகுதியில் நேற்று பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

7.5 அளவிலான இந்த பூகம்பத்தில் ஏற்பட்ட சேதம் பற்றிய விவரங்கள் தெரியவரவில்லை. [-எ]

### ராணுவ முகாம் மூடப்பட்டது

கொழும்பு, மே 21

சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில் இயங்கி வந்த இலங்கை இராணுவ பிரிவு அகற்றப்பட்டது

மேலிடத்து உத்தரவை அடுத்து இங்கிருந்த இராணுவ சிப்பாய்கள் அம்பாறை முகாமுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்முனை வாடிவீட்டில் இயங்கி வந்த இராணுவ முகாமும் மூடப்பட்டு விட்டது. (உ-எ)

### பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 21

தொண்டமானாறு வெளிக்களநிலைய ஏற்பாட்டில் பாடசாலைகளில் நடைபெற்று வரும் ஆண்டு 12 இற்கான பரீட்சையில் இன்று நடைபெறவிருந்த பாடங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

வெளிக்கள நிலைய அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். (உ)

### யாழ். செயலக ஊழியர்கள்:

## நிறுத்தப்பட்ட மூவருக்கும் மீண்டும் வேலை கிடைத்தது

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு-கிழக்கு மாகாண சபையால் வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று யாழ். செயலக ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபையால் 1 3-90 குப்பின் நியமனம் வழங்கப்பட்டு யாழ். செயலகத்தில் கடமையாற்றி வந்த மூன்று ஊழியர்கள் கடந்த மாதம் மாகாண சபையால் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அந்த மூன்று ஊழியர்களுக்கு கடந்த 15 ஆம் திகதி முதல் மாகாண சபை மீண்டும் வேலை வழங்கியுள்ளது. (இ-3)

## இன்றைய ஹர்த்தாலுக்கு ஆதரவு அனைத்து தமிழரும் தரவேண்டும்

### மாத்தயா அழைப்பு

யாழ்ப்பாணம், மே 21

மலையகத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவும், ஒருமைப்பாடும் தெரிவிக்கும் விதத்தில் இன்று வடக்கு — கிழக்கில் நடக்கும் ஹர்த்தாலுக்குச் சகல தமிழர்களும் ஆதரவு அளிக்க வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று அழைப்பு விடுத்தார்.

நேற்று மாலை கோப்பாயில் ''றூட்'' நிறுவனத்தின் குளிர்பானத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மாத்தயா அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது;-

மலையக மக்கள் மீது இராணுவ அடக்கு முறையும், இனவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் விளைவாக எமது

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியேறிய பொலீஸார் புலிகளால் எச்சரிக்கை

ஒட்டுசுட்டான், மே 21

ஒட்டுசுட்டான் பொலீஸ் நிலையத்தை விட்டு விசாரணைக்காக வெளியே சென்ற பொலீஸார் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டனர்.

இது இவ்வாறு இருக்க முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து சிங்களப் பொலீஸார் எவரும் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவில்லை என்றும் 75 சத விகிதமானவர்கள் சிங்கள பொலீஸாரே கடமை செய்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ-113)

## சிறையிலிருந்த ஈழ அகதிகள் மண்டபம் முகாமுக்கு மாற்றம்

சென்னை, மே 21

சென்னை மத்திய சிறையில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு விடுதலை செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் அவர்களின் குடும்பத்தினருடன் மண்டபம், கொட்டப்பத்து அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஒரிஸ்ஸா அகதி முகாமில் இருந்து வெளியேறி வந்த போது சென்னையில் இவர்கள் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களையும் இவர்களின் குடும்பத்தினரையும் சேர்த்து 368 பேரை மண்டபம் கொட்டப்பத்து அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கும்படி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

ஒரிஸ்ஸா முகாமில் இருந்து

(7 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு

## கொழும்பிலிருந்து நேற்று இரவு ரயில் புறப்படவில்லை

கொழும்பு, மே 21

கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு நேற்று மாலை புறப்படவிருந்த சகல இரவு தபால் ரயில் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டன.

இன்று வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கபடவிருக்கும் ஹர்த்தாலையொட்டியே இரவு ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை, மட்டக்களப்பு-திருகோணமலை, தலைமன்னார் ஆகிய இடங்களுக்கான தபால் ரயில் சேவைகளே நேற்றிரவு ரத்துச் செய்யப்பட்டன.

எனினும் இந்த இடங்களிலிருந்து கொழும்பு கோட்டைக்கான இரவு ரயில்சேவைகள் அந்தந்த இடங்களிலிருந்து அட்டவணைப்படி நேற்றிரவு புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கொழும்பு கோட்டைக்கும்- தமிழர் பிரதேசங்களுக்கும் இடையிலான எந்த ரயில்

[7ஆம் பக்கம் பார்க்க]

## உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆகஸ்ட்டில் நடைபெறலாம்

கொழும்பு, மே 21

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முற்பகுதியில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

273 பிரதேச சபைகள் 12 மாநகரசபைகள், 39நகரசபை ஆகியவற்றிற்கு இத் தேர்தல்கள் நடைபெறும்.

சகல சபைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடும் என்று கட்சிப் பொதுச் செயலாளரான அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார். (இ-எ)

## 80 சதவீத வரவு இருந்தாலேயே யாழ். மாணவருக்கு வகுப்பேற்றம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு எண்பது வீதவரவுடைய மாணவர்களுக்கே வகுப்பேற்றப் பரீட்சைகளில் தோற்ற முடியும்.

இப் புதிய நடைமுறை மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்படி ஒரு மாணவன் 80 வீத வரவுடையவனாக இருந்தால் தான் வகுப்பேற்றப் பரீட்சைக்கு தோற்ற முடியும். அத்துடன் வகுப்பேற்றப்படுவான். அதற்கு குறைவான வரவுடைய மாணவன் பரீட்சையில் தோற்ற முடியாது.

இந்த நடைமுறை ஆறாம் ஆண்டில் இருந்து ஒன்பதாம் ஆண்டுவரை அமுல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வட்டுக்கோட்டையில் நேற்று மினிபஸ் விபத்து; 6பேர்காயம்

யாழ்ப்பாணம், மே 21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு சமீபமாக நேற்று இடம்பெற்ற மினி பஸ் விபத்தில் அறுவர் காயம் அடைந்தனர்.

காரைநகர் கசூரினா பீச்சுக்கு சென்றுதிரும்பிக்கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றது.

அன்னலிங்கம் [வயது 26] அரியாலை, ச. சந்திரநாதன் [வயது 29] அரியாலை, செல்வம் [சாரதி வயது 40] அரியாலை, சிவகுமார் [வயது 32] அரியாலை, கே. சந்திரகுமார் [வயது 30] நல்லூர், எஸ் சாந்தகுமாரி [வயது 24] அரியாலை ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர் [இ-9]

## லீவு எடுக்காத ஆசிரியருக்கு அதிக சலுகைகள் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்- மாவட்டத்தில் லீவு எடுக்காமல் கடமையாற்றும் ஆசிரியர்களே பதில் அதிபர்களாக நியமிக்கப்படுவார்கள்.

ஒரு பாடசாலையில் பதில் அதிபருக்கு வெற்றிடம் ஏற்படும் போது அப் பாடசாலையில் லீவு எடுக்காது கடமைபுரியும் ஆசிரியர்களுக்கே அப்பதவி வழங்கப்படும்.

அதேபோன்று லீவு எடுக்காது கடமைபுரியும் ஆசிரியர்களே சேவைக்காலப் பயிற்சி ஆசிரியர்களாகவும், பொதுப் பரீட்சைகளின் மேற்பார்வையாளர்களாகவும் நியமிக்கப்படுவார்கள். (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீற்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

### குமுதம்

விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. 10- 5- 90 இதழில் குழந்தை நட்சத்திரம் ஷாலினியின் பேட்டியும் 17- 5- 90 இதழில் ஸ்ரீதேவியை பேட்டி காண்கிறார் கங்கை அமரன் விலை ரூபா 7/- வியாபாரிகள் தங்கள் ஓடரை பதிவு செய்து கொள்ளலாம். விபரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (3484)

### FOR SALE

Theodolites & Levels, Kern T. 16 அளவைக் கருவி, Automatic Levels (Wild, Nikon) விற்பனைக்குண்டு தொடர்பு: T. சபாரட்ணம் மடத்தடி, தெல்லிப்பளை. (3477)

Farfisa Five Octave Electric Organ with Foot Volume Control Stand and Full Orchestral Accompaniment Going Cheap 59,(101) Temple Road, Jaffna. (13223)

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்பாள் தேவஸ்தானத்தின் இரு காலப் பூசைக்குப் பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை. வீட்டு வசதி உண்டு. சம்பளம் வேலைக்கும், தகைமைக்கும் ஏற்ப கொடுக்கப்படும். நேரில் வரவும். தர்மகர்த்தா (ஸ்ரீ நாக பூஷணியம்பாள் தேவஸ்தானம்) அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3493)

### நெசவாளர் தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. ஆண்களும் தோற்றலாம். சாப்பாடு, தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ''ஏலிம்'' சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய். [3492]

### WANTED

Wanted a part-time English typist. Good pay- Apply Vanniasingham, ''Vairavar Kadadcham'', palaly Road, Thirunelvely, Jaffna. (3494)

### வாடகைக்கு

சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செற் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு ராசி சில்க்ஸ். 70, நியூ மார்க்சட், யாழ்ப்பாணம். [சி/4559]

### வரலாறு

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! வரலாறு- ஆண்டு 6; வரலாறு- ஆண்டு 11 ஆக்கியோன்:- ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3479)

### தொழில் நுட்பப் பயிற்சிகள்

Audio and Video Electronics (இரு பாலாருக்கும்) றேடியோ, T. V. Deck, மணிக்கூடு, எலக்றிக்கல் வயறிங், றிவைண்டிங், பிறிச் (குளிரி) ஆகியன புதிய பிரிவுகள் 28 - 5 - 90 ஆரம்பம். முன்னிட்டு பதிவு செய்யவும் தொடர்பு: (Diploma சான்றிதழ் வழங்கப்படும்) Nesta Technical Institute, 59, Station Road, Jaffna. (3482)

### புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி சேவைப் பணிமனையில் தலைமை உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. பரம்சோதித்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-126)

---

தமிழ்த் திறன் போட்டியில்

# தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் பெற இருக்கும் மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம், கல்லூரியின் நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச எழுத்தறிவாண்டையொட்டி தமிழ்த் திறன் போட்டி ஒன்றை யாழ். மாவட்ட பாடசாலைகள் மட்டத்தில் நடத்தியது.

தமிழ்த் திறன் போட்டியில் ஆக்கம், பேச்சு, கவிதை, சிறுகதை ஆகியன போட்டிகளாக நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

**ஆக்கம்**

ஆண்டு 6, 7 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆக்கப் போட்டியில் தெரிவானோர்:-

முதலாம் இடம்: செல்வி சு. சர்மிளா - யூனியன் கல்லூரி.

இரண்டாம் இடம்: செல்வி ம. சுதர்சனா - யாழ்ப்பாணக் கல்லூரி.

மூன்றாம் இடம்: செல்வி க. கீர்வாணி - யாழ் இந்து மகளிர் கல்லூரி.

**பேச்சு**

ஆண்டு 8, 9 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் தெரிவானோர்:-

முதலாம் இடம்: செல்வி இ. அகிலா - யாழ்ப்பாணக் கல்லூரி.

இரண்டாம் இடம்: செல்வி இ. நிர்மலா - யூனியன் கல்லூரி.

மூன்றாம் இடம்: செல்வி டெ. றிச்போர்ட் டொளி கேள் சென். றோக் றோ. க. வித்தியாலயம்.

**கவிதை**

ஆண்டு 10, 11 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தெரிவானோர்:-

முதலாவது இடம்: செல்வி மு. சாமினி - யாழ் இந்து மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்: செல்வி சு. பாரதி - யூனியன் கல்லூரி.

மூன்றாம் இடம்: செல்வி க. சுலோஜனி - யாழ் இந்து மகளிர் கல்லூரி.

**சிறுகதை**

ஆண்டு 12, 13 மாணவர்களுக்கிடையேயான நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் தெரிவானோர்:-

முதலாம் இடம்: ஸ்ரீநவராஜசிங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்: செல்வன் நி. இரஞ்சித்குமார்- யாழ். மத்திய கல்லூரி.

மூன்றாம் இடம்: செல்வன் த. கௌரிபாலன் - சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

பரிசில் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சுகாதார சேவை விரிவுபடுத்தப்படும்

### தென்மராட்சி வைபவத்தில் தினேஷ்

சாவகச்சேரி, மே 21

''நெருக்கடியான காலகட்டத்தில் கிராமிய மட்டத்தில் நிலையங்களைஅமைத்தோம். இவ்வாறு சுகாதார சேவைகளை விரிவாக்கும் நோக்கில் மீண்டும் முயற்சி செய்கிறோம்.''

சாவகச்சேரி கண்டி வீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சி சுகாதாரப் பிரிவு நிலையத் திறப்பு வைபவம் அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் தினேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

நோயாளர் நலன்புரிச்சங்க செயலாளர் ஆசிரியர் திரு. கே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வீரமரணமுற்றவேங்கை கல்வயல் கண்ணனின் தயார் திருமதி. நமசிவாயம் இச் சுகாதாரப் பிரிவு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் தொடர்ந்து பேசிய தினேஷ் எதிர் காலத்தில் பிரச்சினைகள் ஏற்படும் என்ற பீதி தேவையில்லை எந்நிலையிலும் நாம் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றார்.

அருட்தந்தை செல்வநாயகம், ஆத்மஜோதி திரு. நா. முத்தையா, கொத்தணி அதிபர் திரு. க. குகதாசன் டாக்டர்திரு. ரஞ்சன் அரசியல் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரும் கலந்து கொண்ட இவ்விழாவில் தென்மராட்சி சுகாதாரப் பகுதிப் பொறுப்பாளர் சேகர் நன்றியுரைத் தார். (ப-31)

## உரிமைகளைத் தரமறுத்தால் மீண்டும் ஆயுதப் போராட்டம்

### அஞ்சலிக் கூட்டத்தில் சூளுரை

கைதடி மே 21

எமது பலத்தைக் கணித்தே இலங்கை அரசாங்கம் எம்முடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது. இலங்கை அரசு எமது போராட்டத்தைக் குறைவாக மதித்து உரிமைகளைத் தர மறுக்குமானால் நாம் திரும்பவும் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை ஏற்படலாம்.

வீரமரணமடைந்த லெப்டினன் நிதியின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சாவகச்சேரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

கச்சாய் அம்மன் கோவில் முன்றலில் ஆசிரியர் திரு. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கந்தன் தொடர்ந்து பேசுகையில் விடுதலைப் போராட்டத்தில் அரசியல், ஆயுதம், இராஜதந்திர முறைகளைப் போல முப்பலங்களும் தேவை. அவையாவன ஆயுதபலம், மனோ பலம், மக்கள் பலம் என்பனவாகும். இவற்றுள் மக்கள் பலம் மகத்தானது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மக்கள் பலம் உண்டா என பல வெளிநாடுகள் அவதானித்துச் கொண்டிருக்கின்றன அதைப் பொதுமக்களாகிய நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தொடர்ந்து பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சி மகளிர் படைப் பிரிவு பெறுப்பாளர் செல்வி குமுதினி பேசுகையில் 'எமது தமிழினம் காலம் காலமாக அடக்கி ஒடுக்கப் பட்டு வருகின்றது. அதை எதிர்த்தே போராடி வருகின்றோம். அதற்கு மக்கள் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். இன்றைய நிலையில் பெண்கள்போராடுவது முக்கியமானதாகும். பெண்களும் பின்வாங்காமல் இவ்வாறான போராட்டங்களில் பங்குபற்ற வேண்டும்' என்றார். (இ - 74)

## சேமிப்புப் பழக்கத்தினால் கடன் இல்லாது வாழலாம்

### சேமிப்புத்திட்ட அறிமுக விழாவில் அறிவுரை

மானிப்பாய், மே 21

சேமிக்கும் பழக்கத்தை நாளாந்தம் நாம் கைக்கொண்டால் நம்மை அறியாமலேயே பணம் சேர்ந்து கொள்வதுடன் அவசரகாலங்களில் மற்றவரிடம் கடன்வாங்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தில், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி கிளையினரால் அறிமுகம் செய்யப்பட்ட உண்டியல் சேமிப்பு திட்டக்கணக்குகள் கையேற்பு வைபவத்தில் உரையாற்றிய சுன்னாகம் கிளை முகாமையாளர் திரு. எஸ். சிவராசா இவ்வாறு கூறினார்.

சண்டிலிப்பாய் சர்வோதய இயக்க கிளையினரின் ஆதரவுடன் இவ்வைபவம் நடைபெற்றது. சர்வோதய இயக்க கிளைத் தலைவர் திரு. திருநாவுக்கரசுடன் 18 உதவியாளர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தில் வைத்து 110 கணக்குகள் சேமிப்புக்காக மக்களால் ஆரம்பிக்கப்பட்டன. (இ - 90)

### தட்டுப்பாடு

முல்லைத்தீவு தபாலகத்தில் வான் கடிதங்கள், பெறுமதியான முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. (க-120)

### புதிய லொறி

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத்திற்கு புதிய லொறி ஒன்றைக்கூட்டுறவுத் திணைக்களம் வழங்கியுள்ளது. (இ-111)

## செஞ்சிலுவைச்சங்கம் அளப்பரிய பணியாற்றி வருகிறது

### அரச அதிபர் உரை

குருநகர், மே 21

''தேவையான நேரத்தில் மக்களுக்கு உதவி வழங்க வேண்டும். பிரச்சினைகளையும் துன்பங்களையும் சந்திக்கும் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் அளப்பரிய பணியாற்றி வருகின்றது.''

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தினத்தை முன்னிட்டு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ரி. தெய்வேந்திரன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

தலைமை உரையில் அவர், செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளையும் சேவையையும் மக்கள் முழுதாக அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை மேலும் முன்னேற்றம் அடையும்'' என்று கூறினார்.

செஞ்சிலுவைச் சங்க தினத்தை ஒட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கான பரிசுகளை திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் வழங்கினார். (-IP)

## மூடக்கொள்கை எதிர்ப்பும் போராட்டத்துள் அடங்கும்

### விடுதலைப்புலிகள் பிரமுகர் உரை

கொடிகாமம் மே 21

''ஒன்று பட்ட வாழ்வுக்கு நிகர் உலகில் எதுவுமில்லை. எமது போராட்டம் தனியே பகைவருடன் மோதுவதல்ல. சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகள் பழைய கொள்கைகள் என்பவற்றுடன் மோதி அவற்றை வேரூன்ற விடாது தடுப்பதும் போராட்டமாகும். மடமை இருளில் உலகத்தை அறியாதிருப்பவர்களை ஒளிமயமான சூழலுக்குக் கொண்டு வருதலே எமது நோக்கம்.''

கெற்பேலி வீரபத்திரர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தென்மராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. இராகுலன் இவ்வாறு கூறினார்.

தலைமை வகித்து உரையாற்றிய கச்சாய் பிரதேச சபை பொறுப்பாளர் திரு. இ. கலாதேவன் தனதுரையில் ''ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் அச்சாணி போன்று உறுதி தருபவை. தனிப்பட்ட வேறுபாடுகளை மறந்து, மனவுறுதியுடன் கிராம வளர்ச்சிக்கு உழைக்க எல்லோரும் முன்வரவேண்டும்'' என்றார்.

கிராம சேவகர் திரு. சிவகுரு, திரு. யோகராசா உட்படப்பலர் உரையாற்றினார்கள். (இ.75)

## சனசமூக நிலைய சமாச விசேட பொதுக் கூட்டம்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலைய சமாச விசேட பொதுக் கூட்டம் காலை 9.00 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா சமூகமளிப்பார்.

திரு. கே. வி. செல்வராஜனின் தலைமையில் கூட்டம் நடைபெறும். (இ-118)

## புலிகளிடம் கோரிக்கை

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிகை அலங்கரிப்பாளர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை. இது விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலையிட்டு உணவு முத்திரைகளை சிகை அலங்கரிப்பாளர்கள் பெற்றுக் கொள்ள ஆவண செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று யாழ். மனோகரா திரைப்பட மாளிகையில்நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ-51)

### பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

## இளைஞர் உள்ளத்தை பண்படுத்தி ஆற்றல்களை வளர்க்க உதவும்

செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல பேசுதல் பேச்சுப் பயிற்சியாலேயே ஏற்படும். இப்படியான போட்டிகள் இளைஞர்கள் உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் அவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி சிறந்த ஆற்றல்களை வளர்ப்பதற்கு உதவி புரியும். தமிழ் மொழி வளர்ச்சிக்கு இவ்விதமான போட்டிகள் உறுதுணை புரியும்.

யாழ். மத்திய கல்லூரியில் உலகப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையினரால் நடத்தப்பட்ட பேச்சுக், கட்டுரைப் போட்டிகளுக்கு பிரதம நடுவராக கடமையாற்றிய கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''இன்றைய இளைஞர்கள் தமிழ் மொழிப் பற்றுடையவர்களாகவும், சிறந்த சிந்தனையாளர்களாகவும், அறிஞர்களாகவும் எதிர்காலத்தில் விளங்க வேண்டும். இந்த நல்ல நோக்கத்துடன் தான் உலகப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை இப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளது'' என்றார்.

போட்டிகளை உலகப்பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளைப் பொருளாளர் திரு. இ. தவகோபால் நெறிப்படுத்தினார். (இ-69)


## WANTED

Wanted a Private Secretary with a thorough knowledge in English. Should be able to attend correspondence independently. Should be proficient in English short-hand and typing. Applicants should be over 35 years.

Salary negotible but not less than Rs. 2,000/-

Please apply with copies of certificates of Educational qualifications, experience and character before 28-5-1990.

Personnel Manager,
New Uthayan Publications (Pvt) Ltd.,
292/2, Navalar Road, Jaffna.


## அறிவித்தல்

நுணாவில் மேற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தால் 22 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 30 - 6 - 90 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோவில் மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

இந்து இளைஞர் மன்றம். [3610]


## VACANCIES

A Leading Travel Agent requires experienced Ticketing & counter Assistants for Colombo and Jaffna Office.

Please forward your applications to
The Managing Director,
Cross Travels & Tours [Pvt.] Ltd.
No. 65, 67 Hospital Street, Colombo-1.
on or before 15th June 1990. (13254)


### இந்தியப்பிரசைகள் விவகாரம்:

## டில்லி செல்லும் குழுவில் இ. தொ. கா. பிரதிநிதி

கொழும்பு, மே 21

1லட்சம் இந்தியப் பிரசைகளைதாயகம்திருப்பி அனுப்புவது குறித்து இந்தியாவுடன் பேச்சு நடத்தவுள்ள இலங்கை அரசுக்குழுவில் இ. தொ. கா. பிரதிநிதி ஒருவரும் இடம் பெறுவார்.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் துணை அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி [illegible] தெரிவித்தார்.

இலங்கை அரசுக்குழு அடுத்த மாத ஆரம்பத்தில் புதுடில்லி செல்ல இருக்கிறது.

இப் பிரதிநிதியை இ.தொ. கா. விரைவில் தெரிவு செய்யும் என திரு. செல்லச்சாமி கூறினார்.

ராமேஸ்வரம்- தலைமன்னார் கப்பல் சேவையை மீண்டும் நடத்துவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஆனால் [illegible] முடிவாகவில்லை என்றும் திரு. செல்லச்சாமி சொன்னார். (ப-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### மார்க்கண்டு சின்னத்துரை

தோற்றம்: 10 - 06 - 1919

மறைவு: 26 - 04 - 1990

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த எம் இனிய தந்தையே?

நாட்கள் மாதங்களாகி,
மாதங்கள் ஆண்டுகளாகி,
ஆண்டுகள் யுகங்களானாலும்

உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது. அன்னாரின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 21 - 05 - 90 நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்.

உங்கள் பிரிவை தாங்கமுடியாத

அன்பு மனைவி, பாசமிகுந்த பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (13239)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல் ஒல்லா பேதைக்கென் கண்.

**பொருள்:**

மடலூர்தலைப் பற்றி நள்ளிரவிலும் உறுதியாக நினைக்கின்றேன்; காதலியின் பிரிவின் காரணமாக என் கண்கள் உறங்காமலிருக்கின்றன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

21 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## நா காக்கத் தெரியாவிடின் நாட்டைக் காப்பது எப்படி?

அமைச்சர்கள் அரசாங்கத்தின் உயர் பிரதிநிதிகள். ஏன், அவர்கள் தான் அரசாங்கம் என்று கூறினாலும் மிகையில்லை மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் காலடி எடுத்து வைக்கும் அவர்கள், பின்னர் அதனை முற்றாக மறந்து, தாமே அரசாங்கம் என்ற நினைப்புடன் மட்டும் செயற்படுவது உண்டு. இது எங்கள் நாட்டில் சர்வசாதாரணம்.

அமைச்சர்களே அரசாங்கமாக அமைவதால், அவர்கள் பேசுவதும், எழுதுவதும் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால் அவர்களில் பலரும், அந்த முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல், கண்டவற்றை எல்லாம் பேசுகிறார்கள்! நிதானம், அர்த்தம், தர்க்கநிலை என்று எதுவும் இல்லாமல் வாயில் வந்ததை எல்லாம் பொரிந்து தள்ளுகிறார்கள்!!

மக்களைக் கவருவதற்காக, அரசாங்கத்தின் குறைபாடுகளை மூடி மறைப்பதற்காக பொதுக்கூட்டங்களில் மட்டும் தான் அமைச்சர்கள் வரம்பில்லாமல் நாக்கைச் சுழற்றுகிறார்கள் என்றில்லாமல், நாடாளுமன்றத்திலும் அந்தப் ''பழக்க தோஷம்'' பிரதிபலிக்கிறது.

எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்ற விவஸ்தையே இல்லாமல், நாடாளுமன்ற நாகரீகத்திற்கு அப்பாற்பட்டு, தமக்குள்ள பொறுப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளாதவர்களாகப் பேசும் அமைச்சர்கள். அனேகமாக எல்லா நாடுகளிலும் இருப்பது உண்டு.

இந்தியாவில் ஒரு ராஜ் நாராயணன் போல, இலங்கையிலும் முந்திய ஆட்சிக் காலத்தில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி இருந்தார்!

உதாரணமாக, தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளில் சித்திரவதை செய்யப்படுதல், தமிழ் இளைஞர்கள் காணாமற் போதல், ஸ்ரீலங்கா அரசபடைகள் செய்த அரக்கத்தனமான கொலைகள் என்பன குறித்து சர்வதேச அமைப்புகள் கண்டனம் தெரிவித்த போது, அவற்றைக் கிண்டல் செய்யும் வகையில் பேசி வந்தவர் திரு. அத்துலத்முதலி.

இருபத்தைந்து சத முத்திரையை ஒட்டி பொய்யாகத் தயாரிக்கப்பட்ட உறுதியுரைகளின் அடிப்படையாகக் கொண்டே சர்வதேச மன்னிப்பு சபை தனது அறிக்கைகளைத் தயாரிப்பதாகத் தரம் குறைத்துப் பேசியவர் லலித். மனித உரிமை இயக்கத்தையும் மதிப்பிறக்கி, வாயில் வந்த மாதிரி எல்லாம் அவர் பேசியிருந்தார்.

அவரது அடியொற்றி இப்போதைய பாதுகாப்புத் துணை அமைச்சரும், தமது பொறுப்பான பதவியையும், நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும் மறந்து பேசி வருகிறார்.

சர்வதேச மன்னிப்புச் சபை கொலைகாரர்களுக்கு உதவுவதாகவும் அதனால் பிரஸ்தாப சபையினரும் ஒரு விதத்தில் கொலைகாரர்கள் என்றும் —

சர்வதேச மன்னிப்புச் சபையிலிருந்து வரும் கடிதங்களைத்தான் படிப்பதில்லை என்றும், அவற்றில் ஒட்டப்பட்டிருக்கும் நல்ல வர்ண முத்திரைகளை மட்டும் உரித்தெடுத்து மகனுக்குக் கொண்டு போய் கொடுப்பதாகவும் — கிண்டல் செய்திருக்கின்றார். இப்போதைய பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன்.

பாதுகாப்பு அமைச்சர்கள் என்றால், மிகச் ''சீரியஸான'' விடயங்களை, பொறுப்பற்ற விதத்தில் பேசிச் சில்லறையாக்கி விடுவார்களோ?

அமைச்சர்கள் இப்படிச் சின்னப்பிள்ளைத் தனமாகவும் தங்களையே சில்லறைகளாக்கியும் பேசுவது நாடாளுமன்றத்தின் மதிப்பைக் குறைத்து விடும் என்று அவர்கள் உணரவில்லையா? மந்திரி என்ற அந்தஸ்தில் இருந்து எதைப் பேசினாலும் மந்திரம் என்று மக்களை எண்ண வைக்க வேண்டியவர்கள், மாறாகத் தங்களைக் கோமாளிகள் என்று மக்களை எண்ண வைக்க முயல்வதேன்?

முழுப்பூசினியை சோற்றில் புதைக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள மறந்து, சிக்கலான விடயங்களை சில்லறையாக்க முயன்றால் தாங்கள் கேலியாட்களாகுவர் என்பதை இனியாவது இவர்கள் உணர்வார்களா? தமது பதவிக்குரிய பண்பையாவது பேணுவார்களா? நா காக்கத் தெரியாதவர்களால் எப்படி நாட்டைக் காக்க முடியும்? அந்த நற்குணம் இல்லாதவர்கள் மந்திரிப் பிரதானிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள்!

## முல்லைத்தீவில் சிறுபோக வேளாண்மையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை

மாங்குளம் மே 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மையின் போது பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. சிறுபோக வேளாண்மை அறுவடையில் கூடிய விளைச்சல் பெறும் நெல் சொந்தக்காரர்களுக்கு பதிலாக பணமும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் நாற்று நடுகையில் ஈடுபடுவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1990 - 1991 ஆம் ஆண்டு பெரும் போக - சிறு போக விவசாயத் தொழிற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றார்.

இம்மாவட்டத்தை பொறுத்த மட்டில் சென்ற வருட கால போக வேளாண்மை பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 65 புசல் நெல் அறுவடை செய்யப்பட்டது.

இம்மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலும் பெரிய நீர்ப்பாசனக் குளங்களிலும் போதியளவு தண்ணீர் இருப்பதால் இவ்வருட சிறுபோக வேளாண்மையின் 7000 ஏக்கரில் நெல்லும் 700 ஏக்கரில் உப உணவுப் பொருட்களும் பயிர் செய்யப் படவுள்ளது.

உற்பத்தியைப் பெருக்கு முகமாக செயற்படாமல் இருக்கும் காணிகளை பயிர் செய்கைக்கு உட்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காணி அற்றவர்களுக்கு கவிசரிக்கப்பட்ட காணிகளைப் பகிர்ந்தளிப்பதில் அரசாங்க அதிபர் செயற்பட்டுள்ளார். இந்த விடயத்தில் முல்லைத்தீவு கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். பஞ்சலிங்கம் அரச அதிபருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளார். (இ-94)

### அரிசி மூடை கலப்படத்தை தடுக்க திட்டம்

கொழும்பு மே 21

அரிசி மூடைகளில் கலப்படம் இடம் பெறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சகல அரிசி மூடைகளிலும் இனிமேல் விலை நிறை, ரகம் அரிசி ஆலையின் பெயர் முதலிய விவரங்களை சகல அரிசி ஆலை உரிமையாளர்களும் குறிப்பிட வேண்டும். என்று வற்புறுத்தும் திட்டம் ஒன்றை கூட்டுறவு உணவுத் துறை அமைச்சர் வீரசிங்கா மல்லிமராச்சி அமுல் நடத்தத் தீர்மானித்துள்ளார்.

ஒரு மூடை அரிசியுடன் ஐந்து கிலோ வரையில் மணல் கலக்கப்படுவதாக அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதைத் தொடர்ந்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (இ-எ)

### முகாமைத்துவப் பயிற்சி நெறி

பருத்தித்துறை மே 21

முதலாம், இரண்டாம், மூன்றாம் தர அதிபருக்கான முகாமைத்துவப் பயிற்சிநெறி ஒன்றை நடத்துவதற்கு இம்மாதம் 22 ஆம், 26 ஆம் 27 ஆம் திகதிகளிலும் ஜூன் 7 ஆம் திகதியும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி முற்பகல் 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறும். (இ-118)

### பாராட்டு விழா

கொக்குவில் மே 21

எழுத்துத் துறையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்யும் கவிஞர் பா. சத்தியசீலனுக்கு பாராட்டுவிழா நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் மன்றம், உயர் வகுப்பு மாணவ மன்றத்தின் அனுசரணையுடன் அடுத்த மாதம் 7 ஆம திகதி இவ்விழா நடைபெறும்.

அன்றைய தினம் பா. சத்தியசீலனின் '' அருளப்பர் அம்மானை '' நூலுக்கு ஆய்வும், அறிமுகமும் தமிழ் பேரறிஞர் க. சொக்கனாலும்- '' சிறுவர் ஆக்கங்கள் '' நூலுக்கு ஆய்வும், அறிமுகமும் சந்தக் கவிஞர் சோ. பத்மநாதனாலும் நிகழ்த்தப்படும். (இ-69)

## தொழில் நுட்பவியலாளர்கள் தெற்கிலிருந்து வரத்தயக்கம்

யாழ்ப்பாணம் மே 21

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள எக்ஸ். றே இயந்திரங்களைத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்தே தொழில்நுட்பவியலாளர்கள் வரவேண்டும். ஆனால் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து அவர்கள் யாழ்ப்பாணம் வரத் தயங்குகிறார்களாம்.

இதன் காரணமாக யாழ். ஆஸ்பத்திரிகளில் உள்ள எக்ஸ் றே இயந்திரங்களின் முழுப் பகுதியும் திருப்திகரமான முறையில் இயங்குவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது- யாழ். ஆஸ்பத்திரியில் நான்கு எக்ஸ். றே இயந்திரங்கள் மட்டுமே இயங்குகின்றன. அதுவும் அரை குறையாகவே இயங்குகின்றன என்று கூறப்படுகிறது. (இ-10)

**1 லட்சம் இந்தியர் பிரச்சினை:**

## 14 தொழிற்சங்கங்கள் சேர்ந்த அமைப்பு அரசுடன் பேசும்

கொழும்பு, மே 21

ஒரு லட்சம் மலையக இந்தியப் பிரசைகளை இந்தியாவுக்கு திருப்பிஅனுப்பும் பிரச்சினை குறித்து அரசுடன் பேச்சுக்கள் நடத்துவது என்று 14 தொழிற்சங்கங்களைக் கொண்டதோட்டத் தொழிற்றுறை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த கூட்டமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கூடி இப்பிரச்சினை பற்றி விவாதித்தது.

இந்தியப்பிரசைகளை தாயகம் திருப்பி அனுப்பி வைப்பதை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும்.

இது தொடர்பாக தொழிற்சங்கங்களுக்கும் அரசுக்கும் இடையே புரிந்துணர்வு ஒன்று ஏற்படும் வரை இந்தியப் பிரசைகள் தாயகம் அனுப்பப்படக் கூடாது என்றுஇந்தக் கூட்டமைப்பு தீர்மானித்தது. (இ-எ)

**பொதுப் பரீட்சைகள்:**

## மேற்பார்வையாளர் நியமனத்தில் புதிய, பழைய ஆசிரியருக்கு சம இடம்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

மானிப்பாய் மே 21

''அடுத்த மூன்று வருடங்களுக்கு நடைபெறும் பொதுப் பரீட்சைகளில் பரீட்சை மேற்பார்வையாளர்களாகவும் நிரந்தர நோக்குனர்களாகவும் ஐம்பது சதவீதம் புதியவர்களையும் ஐம்பதுசதவீதம் பழையவர்களையும் புகுத்த எண்ணியுள்ளேன்; சகல ஆசிரியர்களும், தொழிற்சங்க வாதிகளும் எனது இந்த முடிவுக்கு ஆதரவு தர வேண்டும்.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கொத்தணி அதிபர்களின் மதிப்பீட்டுக் கருத்தரங்கில் திரு. சுந்தரலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மருதனாமடம்கோட்டகல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

வடமாநில கல்விப்பணிப்பணிப்பாளர் அங்கு மேலும் பேசியதாவது-

எமது பிரதேசத்து கல்வி மேம்பாட்டுக்காக பல நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றேன். கடந்தகாலச்சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பு செய்வதில் எமக்கு சில தடைகள் ஏற்பட்டன. போதிய மரங்களை பெற்றுக்கொள்வதிலும், மண்ணைப் பெற்றுக் கொள்வதிலும் இருந்த சிக்கல்கள் எனது முயற்சியால் ஓரளவு தீர்ந்துள்ளன.

எமது கல்வித்திணைக்களத்துக்கு ஒரு புதிய கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். 10 லட்சம் ரூபா பணம் இதற்கு கிடைத்துள்ள போதிலும் மேலும் 10 லட்சம் ரூபா பணம் தேவைப்படுகிறது.

முறைசாராக்கல்வி எமது பிரதேசத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். இதற்கென தனியானதொரு கட்டடம் தேவை. இன்னும் ஆறுமாத காலத்துள் 80லட்சம் ரூபா செலவில் மூன்று

(7 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாய டிப்ளோமா பயிற்சி விண்ணப்பம் கோரப்படுகிறது

திருகோணமலை மே 21

வடக்கு-கிழக்கு, காணி விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் வவுனியா விவசாயக் கல்லூரியில் 1990 /92 கல்வியாண்டுக்கான இருவருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு ஜீ சி ஈ. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல் ஆகியவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தியெய்திய 18-25 வயதுக்கு இடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை அதிபர், விவசாயக் கல்லூரி வவுனியா என்ற விலாசத்தில் பெறலாம். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் 25-06-90 அல்லது அதற்கு முன்பதாக, 42, கஸ்கிசன் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (இ)

## இராமநாதன் ஞாபகார்த்த பொருட் காட்சிச்சாலை திறந்து வைக்கப்பட்டது

மானிப்பாய், மே 21

மருதனார்மடம் உதவிக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தின் முதலாண்டு நிறைவு விழாவையொட்டி சேர். பொன் இராமநாதன் நினைவாக ஞாபகார்த்த அரும் பொருட்காட்சிச்சாலை ஒன்றை வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் திறந்து வைத்தார்.

திரு. இராமநாதனால் உபயோகிக்கப்பட்டதாக கருதப்படும் பல பொருட்கள் இந்த ஞாபகார்த்தசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டில்கள், மேசைகள் வெளிச்சவிளக்குகள், புகைப்படங்கள், மணிக்கூடு போன்ற பழையகால பொருட்கள்கபல அங்கு வைக்கப்பட்டுள்ளன.

திரு. ஆர். சுந்தரலிங்கம் இராமநாதன்கல்லூரி வளவில் தாவரவியல் பூங்கா ஒன்றையும் திறந்துவைத்தார்.

அங்கு கல்விப்பணிப்பாளரராலும் உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு. ஆர். கே. குலசேகரன், திரு. சி. தியாகராசா, கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோராலும் மரங்கள் நடப்பட்டன.

இசை நடன ஆசிரியர் ஒன்றியத்தினால் இரு நாட்கள் நடத்தப்பட்ட கட்புலசெவிப்புல சாதனக் கண்காட்சி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கேதீஸ்வர மகோற்சவம்: 28 ஆம் திகதி கொடியேற்றம்

கொக்குவில், மே 21

ஈழ வள நாட்டின் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றான அருள்மிகு கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி செவ்வாய் இரதோற்சவமும் மறுநாள் வைகாசி விசாகத் தன்று தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுறும்.

1 ஆம் நாள் பகல் உற்சவம் திருப்பணிச் சபையினராலும், இரவு திருமலை மாவட்ட சைவ அடியார்களாலும்,

2 ஆம் நாள் பகல் சாவகச்சேரி இந்துக் கல்லூரி இரவு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தினராலும்.

3 ஆம் நாள் பகல் கண்டி மத்திய மாகாண சைவ மகாசபை, இரவு வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியினராலும்;

4 ஆம் நாள் பகல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இரவு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தினராலும்.

5 ஆம் நாள் பகல் தெல்லிப்பளை மகா ஜனாக்கல்லூரி, இரவு கொக்குவில் இந்துக் கல்லூரியினராலும்.

6 ஆம் நாள் பகல் யாழ். மத்திய கல்லூரி இரவு திருப்பணிச் சபையாராலும்.

7 ஆம் நாள் பகல் சுன்னாகம் இராமனாதன் கல்லூரி, இரவு முல்லைத்தீவு — வவுனியா மாவட்ட சைவ அரசாங்க ஊழியர்களாலும்.

8 ஆம் நாள் பகல் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரவு யாழ். இந்துக் கல்லூரியினராலும்.

9 ஆம் நாள் காலை இரதோற்சவமும் திருப்பணி சபை, மாலை பிரதோச விழா திரு. நா. முத்தையா சாவகச்சேரி, இரவு உரும்பிராய் இந்துக் கல்லூரியினராலும் நடத்தப்படவுள்ளது.

(இ-69)

## செய்திக்கொத்து

### தென்மராட்சி கோட்டக்கல்வி அலுவலகம்

பச்சிலைப்பள்ளி மே 21

புதிதாக உருவாக்கப்பட்ட தென்மராட்சிகோட்டக்கல்வி அலுவலகம் சாவகச்சேரி ஹென்ஸ்மன் லேனில் உள்ள வீடொன்றில் இயங்க உள்ளது. கோட்டக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ள எஸ். தனஞ்செயன் அவர்களால் 23 ஆம் திகதி இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படும். (இ-117)

### சைக்கிள் திருட்டு

கொக்குவில் மே 21

கோவில் கும்பிட சென்ற பெண்ணின் சைக்கிள் திருடப்பட்டது. யாழ். பெருமாள் கோவில் முன்பாக இச்சம்பவம் நடைபெற்றது. (இ-9)

### நிலுவைப் பணம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் மே 21

யாழ் மாவட்ட பாடசாலைகளில் மதிய உணவு விநியோகத்தால் பாடசாலை அதிபர்களுக்கு இருந்த நிலுவைகளை உடனடியாக வழங்க வடபிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார். (ப-10)

### கட்டட வேலை

அச்சுவேலி நவீன சந்தைக் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. 14 கடைகளுக்கான அறைகள் கட்டும் வேலைகளில் பெரும்பகுதி நிறைவடைந்துள்ளது. (இ-11)

### பொதுக் கூட்டம்

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபை அதன் வருடாந்த பொதுக் கூட்டத்தை அண்மையில் நடத்தியது. (ப-30)

### ஆலயப் பணிக்காக பொதுநிதியம்

மானிப்பாய் சோதிவேம்படி காளி அம்மன் ஆலய அடியார்களின் வசதிகருதி மண்டபப் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக பொது நிதியம் ஒன்று திரட்டப்படவுள்ளது. (இ-90)

## வாசகர் திருமுகம்

### பல் நோயாளிகளின் பரிதாப நிலை

பளை அரசினர் வைத்திய சாலையில் பல் வைத்தியராகக் கடமையாற்றியவர் சென்ற மாதம் இடம் மாற்றலாகிச் சென்றதனால் அவ்விடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. தினமும் 25 பல் நோயாளர்வரை பளை வைத்தியசாலைக்கு வந்து ஏமாற்றத்துடன் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்கு பிரயாணக் கஷ்டங்களுடனும், பல் வேதனையுடனும் அலைந்து திரிகின்றனர்.

மேற்படி நோயாளர்களின் நலன்கருதி இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என நோயாளர்களும் நலன்விரும்பிகளும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

ம. மதிவதனி
கிளாலி,
எழுதுமட்டுவாள்.

### ஆசிரியர் பாதிப்பு;

யாழ். மாவட்டப் பாடசாலைகள் இரு நேரமாக இயங்குவதால் பல ஆசிரியர்கள் மதிய உணவிற்கு வீடு செல்ல இயலாது அல்லற்படுகின்றனர். புதிய சுற்று நிருபத்தின் படி மதிய இடைவேளையின் போது மாணவர்களை ஆசிரியர்மேற்பார்வை செய்யவேண்டியுள்ளது. இக்காரணத்தினால் பல அதிபர்கள் ஆசிரியர்களை மதிய உணவிற்கு வீடு செல்ல அனுமதியளிக்கத்தயங்குகிறார்கள். இதனல் பாடசாலைக்கு அயலிலுள்ள ஆசிரியர்களும் மதிய உணவின்றி பி. ப. மூன்றரை மணி வரை பாடசாலையில் இருக்கவேண்டியுள்ளது.

மூன்று ரூபா உணவு பாலர் வகுப்பு மாணவருக்கும் க. பொ. த. மாணவருக்கும் சமமாக அளிக்கப்படுகிறது. க. பொ. த. மாணவன் உடல், உள வளர்ச்சிக்கு இவ் உணவு போதுமா? அல்லது பூரணமானதா? மத்தியான இடைவேளையின் போது முன்னர் போல் மாணவர் வீடு சென்று உணவருந்தி வர அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள எத்தனை பாடசாலைகளில் மாணவரதும் ஆசிரியரதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வசதிகள் இருக்கின்றன மாணவர்களும் ஆசிரியர்களும் தொடர்ச்சியாக ஏழு மணி நேரம் பாடசாலையில் இருப்பதால் பல பாடசாலைகளில் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாது இவர்கள் படும் இன்னல்களை யாரிடம் முறையிடுவது?

சம்பந்தப்பட்டவர்கள் இக் குறைபாடுகளை நீக்க ஆவன செய்வார்களா?

ம. சரவணபவன்.
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,

## நாணய மாற்று விகிதம்

17-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.30 | 232.26 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6710 77 | 6742 63 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2431 70 | 2449.73 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 716 57 | 730 09 |
| 100 | ஜப்பானிய யென் | 26.2111 | 26.4376 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 90 Day Classes**

வினா - விடை

**அளவையியல் - கேசவன்**
(குறியீடு)

**ஆரம்பம்: 23 - 05 - 1990**

[சி-5047]

ஒட்டோ
எலக்ட்ரீஷியனும், வெல்டருக்குமான

## வெற்றிடங்கள்

1, **வெற்றிடங்களின் எண்ணிக்கை:-**
(அ) ஒட்டோ எலக்ட்ரீஷியன் — 01
(ஆ) வெல்டர் — 01

2. **வேலைத்தலம்:-**
பொறியியல் வேலைத்தலம் வீதி அபிவிருத்தி அதிகார சபை மாங்குளம்.

3. **வயது:-**
40 வயதுக்குட்பட்டவர்கள்

4. **தகைமை:-**
குறைந்தது எட்டாம் வகுப்பு

5. **அனுபவம்:-**
இத்துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்று இருக்க வேண்டும்.

6. **விண்ணப்ப முடிவு திகதி:-**
31 - 05 - 1990 க்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு உரிய சான்றிதல்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

**மாகாண பணிப்பாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[சி-5043]

+

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி மைக்கல் ஞானப்பு

**மலர்வு:** 15 - 03 - 1930
**உதிர்வு:** 21 : 05 - 1989

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டு நீங்கள் சென்று ஓராண்டுதானம்மா உங்கள் நினைவுகளோ என்றும் எங்களை விட்டு அகலவில்லை.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

''மணிபல்லவம்''
பிடாரி கோவிலடி,
ஆனைக்கோட்டை.

(13227)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு:** 10 - 04 - 1964

**உதிர்வு:** 21 - 05 - 1986

செல்வன்

### குமாரசாமி சர்வானந்தன்

மானிடனாய் அவனியிலே அவதரித்து
மானிட உள்ளங்களை அன்பு மழையால்-
கொள்ளை கொண்ட மைந்தா!
நீ எம்மை விட்டு சென்று நான்காண்டு சென்றாலும்
உன் அன்பு மழையில் நனைந்த உள்ளங்கள்!
இன்றும் உன் பிரிவை நினைத்து
மெழுகாய் உருகுகின்றனவே!

உன் பிரிவால் வாடும்:
**அப்பா, அம்மா, சகோதரர்கள்**
**மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

No. 25, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(3600)

இந்திய உபகண்டத்தில் அமெ. உயர் குழு:

# காஷ்மீருக்குக் கூடுதல் சுயாட்சி; புஷ் அரசின் சமரச யோசனை!

**தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்துக - பெனாஸிருக்கு ஆலோசனை**

வாஷிங்டன், மே 21

காஷ்மீர் தகராறுக்குத் தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தீவிரமாக ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இதன் ஒரு கட்டமாக திரு. ஜோர்ஜ் புஷ் தனது விசேட தூதர் ஒருவர் தலைமையில் உயர் நிலைக் குழு ஒன்றை பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் அனுப்பி வைக்கத் தீர்மானித்திருப்பதும் தெரிந்ததே.

இதன்படி அமெரிக்காவின் விசேட தூதர், மாஸ்கோவிலிருந்து நேரடியாக இன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் செல்கிறார். பின்னர் புதுடில்லி செல்வார்.

பிரதமர்கள் பெனாசிர் பூட்டோ, வி.பி. சிங் ஆகியோருடன் தனித்தனியாக நடத்தும் பேச்சுக்களின் போது காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் திட்டம் ஒன்றை இந்த அமெரிக்க உயர்நிலைக் குழு முன்வைக்கும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத்காஷ்மீர் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு - காஷ்மீர் ஆகியவற்றின் எல்லைகள் அப்படியே இருக்கவேண்டும்.

★ இரண்டு காஷ்மீர்களிலும் அரசியல் மற்றும் எதுவித மாற்றங்களும் செய்யப்படக் கூடாது.

★ தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுத்து இந்தியாவின் பொறுப்பில் உள்ள காஷ்மீருக்குள் அனுப்புவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்.

★ அதேவேளை - இந்தியா தனது பொறுப்பில் உள்ள காஷ்மீர் மாநிலத்துக்கு கூடுதல் சுயாட்சி உரிமை வழங்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட அம்சங்கள் அமெரிக்காவின் சமரசத் திட்டத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயஉரிமையைத் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரும் பாகிஸ்தான் அமெரிக்கயோசனையை ஏற்குமா என்பது சந்தேகம் என்று சொல்லப்படுகிறது. (எ)

★ அமெரிக்கத் தளங்கள்

# பிலிப்பீன்ஸ் மண்ணில் நீடிக்க மக்கள் அங்கீகாரம் தேவை!

## கொரஸோன் பேட்டி

மணிலா, மே 21

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்கினோ செய்மதி மூலம் ஜப்பான் டெலிவிஷனுக்கு நேற்றுப் பேட்டியளித்தார்.

1991 செப்டம்பரில் சகல அமெரிக்க படைத்தளங்களும் பிலிப்பீன்ஸில் இருந்து வெளியேறிவிடவேண்டும் என்று அமெரிக்காவுக்கு அறிவிக்கப்பட்டு விட்டதாக திருமதி அக்யுனோ தெரிவித்தார்.

அமெரிக்கத் தளங்களைத் தொடர்ந்து வைத்திருக்கும் உடன்பாடு ஏற்பட்டால் அது எமது செனட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பின்னர் மக்களின் அங்கீகாரம் பெற சர்வசனவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். வெளிநாட்டுத் தளங்கள் எமது மண்ணில் இருக்கக்கூடாது என்று ''எமது அரசியல் சாசனம் தெளிவாகக் கூறுகிறது'' — இப்படி திருமதி கொரஸோன் சொன்னார். (ட)

★ காஷ்மீர் பிரச்சினையில்

# மூன்றாம் தரப்பினரின் தலையீடு வேண்டாம் என இந்தியா பதில்!

புதுடில்லி மே 21

எல்லைப்புறத்தில் பாகிஸ்தான் தனது படைகளைக் குவிக்கும் போது, ஏனையவரைத் திருப்தி செய்வதில் இந்தியா ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியாது.

பிரதமர் வி.பி சிங் நாடாளுமன்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில், முன்கண்டவாறு கூறினார்.

இதனிடையில் —

காஷ்மீர் தகராறில் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டுக்கு இடமளிக்கமுடியாது என்று புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் காஷ்மீர் தகராறுக்கு தீர்வு காணத் தவறுவது துணைக்கண்டத்தின் அமைதிக்கு பங்கத்தையே ஏற்படுத்தும் என்று அந்த அதிகாரிமேலும் சொன்னார். (எ)

# ''எந்த மனைவி மீது அதிக அன்பு இறப்பதற்கு முன் அறியுங்கள்''

## பிலிப்பீன்ஸ் இராணுவ வீரருக்கு ஜெனரல் வேண்டுகோள்

பிலிப்பீன்ஸ் இராணுவ ஜெனரல் ஒருவருக்கு புதுவிதப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

ஒரு வீரர் உயிரிழந்தால் அவரது சடலத்துக்கு உரிமை கோரி ஒன்றுக்கு மேற்பட்ட 'மனைவி'மார் வருவதே இதற்குக் காரணமாகும்.

''இதுவரை எந்தப் பெண் அதிக சத்தம் போட்டு அழுதாரோ அவரிடம் இறந்த வீரரின் சடலத்தை ஒப்படைத்து வந்தோம்.

''இந்த விஷயம் எப்படியோ வெளியாகி விட்டது.

''உண்மையான மனைவிமாரிலும் பார்க்க ஆசைநாயகிகள் உச்சஸ்தாயில் அழுகுரல் எழுப்பத் தொடங்கினர்.

''இதனால் உண்மையான மனைவி யார் என்பதை எம்மால் கண்டுபிடிக்க முடியாது போய்விட்டது''-

இத்தகவல்களை வெளியிட்ட ஜெனரல் பான்டலன் தும்மலோ தனது வீரர்களுக்குப் புதுமையான உத்தரவு ஒன்றை விடுத்துள்ளார்.

''நீங்கள் இறப்பதற்கு முன்னர் உங்களுடைய 'மனைவி'களில் யார் மீது உண்மை அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை தெரிவு செய்து எமக்கு அறிவித்து விடுங்கள்'' என்று ஜெனரல் தும்மலோ கூறினார் என்று பிலிப்பீன்ஸ் பத்திரிகை 'ஸ்டார்' செய்தி வெளியிட்டது. (எ)

### சோவியத்தின் பன்மொழிப் புலவர்

மாஸ்கோ, மே 21

உலகில் நிகழும் பல்வேறு அதிசய நிகழ்ச்சிகள், முதன் முதலாக நிகழும் இணையற்ற சாதனைகள் ஆகியவைகளை தொகுத்தளிக்க சோவியத்யூனியனைச் சேர்ந்த 'பாரி' என்ற அமைப்பு முன்வந்துள்ளது.

உலகின் பல்வேறு இணையற்ற சாதனைகளில் 70 சதவிகிதம் சோவியத் மக்கள் ஆற்றியவை என இந்த அமைப்பு தெரிவிக்கிறது.

'பாரி' அமைப்பு வெளியிடும் புத்தகத்தின் பெயர் 'பாரியின் சாதனைகள் தொகுப்பு' என்று இருக்கும்.

உலகில் மிக உயரமான மனிதரும், உயரம் குறைந்த மனிதரும், பலம் வாய்ந்த மனிதரும் சோவியத் யூனியனில்தான் வாழ்கின்றனர்.

240 சென்டிமீற்றர் உயரமான விக்டர் சிவென்கோ ஒரு காலத்தில் கூடைப் பந்து விளையாட்டு வீரராக இருந்தார்.

மேலும் இவ்வமைப்பு ''உலக அதிசயங்களின் களஞ்சியம்'' ஒன்றை வெளியிட தீர்மானித்துள்ளது. இதில் பல அதிசய விஷயங்கள் இடம்பெற உள்ளன.

38 மொழிகளில் பேசும் திறமைபெற்ற யூரி சலோம்கினைப் பற்றியும், 17 மொழிகளில் ஹாஸ்யமாகப் பேசக்கூடிய வஸ்தான்ஸ்கி சகோதரர்களைப் பற்றியும் செய்திகள் இதில் இடம் பெறும்

கண்களை மூடிக் கொண்டு முகர்ந்து பார்ப்பதன் மூலம் நாளிதழ்களை, 'துருத்' பத்திரிகையா அல்லது 'இஸ்வெஸ்தியா' பத்திரிகையா? என்று வேறுபடுத்திக் கூறும் திறமை வாய்ந்த பத்து வயதுப்பையன் சிரியோ ஷெ[illegible]லஸ் பற்றிய செய்தியும் இப்புத்தகத்தில் வெளியிடப்படும். (எ)


குமுலுஸ் D.F. போட்டி

**BASF**
**குமுலுஸ் D.F.**
**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ____________________
முகவரி ____________________
____________________
வியாபாரியின் பெயர் ____________________
____________________
முகவரி ____________________
____________________

FINCHEM AGRO DIVISION
**பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்**
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No 9/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளடைந்த கிராமங்களுக்கு ஒளியூட்டுவதே எமது நோக்கம்

## கிளிநொச்சி அரச அதிபர் உரை

வளர்ந்துவரும் விஞ்ஞானத்தால் பார்வையற்ற பலர் கண்ணொளி பெறுவதுபோல் இருளடைந்த கிராமங்களை ஒளிபெறச் செய்வதே எமது நோக்கமாகும். கிளிநொச்சித் தொகுதி ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டிருப்பதால் இத் தொகுதிக்கு ஒதுக்கப்படும் நிதியைக்கொண்டு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது. இதனால் வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றே இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பளை இத்தாவில் கிராமத்தின் மின் ஒளி வழங்கும் அங்குரார்ப்பண வைபவத்தில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

இத்தாவில் இந்து இளைஞர் ஒன்றியத் தலைவரும் ஆசிரியருமான திரு. க. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் தென்மாராட்சி அரசியல் பொறுப்பாளர் கி. பாப்பா, பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். எஸ். அமிர்தலிங்கம், இலங்கை மின்சாரசபை வடபிரந்திய பிரதி பொது முகாமையாளர் வீ. கந்தசாமி, பளை உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். [இ-117]

ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பதவி விலகும்

# இ.போ.ச ஊழியருக்கு நஷ்டஈடு வழங்க 60 கோடி ரூபா தேவை!

ஊக்குவிப்பு ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பதவி விலகும் இ.போ.ச ஊழியருக்கு நஷ்டஈடாக வழங்க 60 கோடி 40லட்சம் ரூபாவை ஒதுக்கும்படி நிதி அமைச்சை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை கேட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பித்த 5ஆயிரத்து 442 ஊழியர்களுக்கு வழங்கவே இப்பணம் தேவைப்படுகின்றது.

குறிப்பிட்ட காலக்கெடு கழிந்த பின்னரும் பல ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

அவ் விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விண்ணப்பிக்கும்காலக்கெடுவும் நீடிக்கப்பட்டுள்ளது

புதிதாக விண்ணப்பித்தவர்களையும் சேர்த்தால் இதுவரை விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 7ஆயிரத்தைத் தாண்டி விட்டது.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் 52ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர்.

இவர்களில் 15ஆயிரம்முதல் 20ஆயிரம் வரையான ஊழியர்கள் இந்த ஊக்குவிப்பு ஓய்வூதியதிட்டத்தின்கீழ்விண்ணப்பிப்பர் என்று இ.போ.ச வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (உ-எ)

# தற்காலிக சுதந்திரம் நீடிக்குமா; மீண்டும் பூகம்பம் வெடிக்குமா?

## சம்பூர் கூட்டத்தில் வாஞ்சிநாதன்

மூதூர் மே 21

''இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளை அடையும் வரை நாம் சுதந்திரமாக வாழவே முடியாது. இன்றைய தற்காலிக சுதந்திரம் நீங்குமா? அல்லது மீண்டும் ஒரு முறை பூகம்பம்வெடிக்குமா?'

மூதூர் பிரதேசம் சம்பூர் என்ற இடத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தில் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும்கவிஞரும்ஆகிய திரு. மு.வே. யோ வாஞ்சிநாதன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது;.

இன்றைய கால கட்டத்தில் அரசுடன் எமது கட்சியின் அரசியல் ஆலோசகரான திரு. அன்ரன் பாலசிங்கமும், செயலதிபர் திரு. யோகரட்ணம் யோகியும் நடத்தி வரும் பேச்சு வார்த்தைகள் தோல்வியடைய நேரிட்டால் அரசு எம்மீதும் எமது மக்கள் மீதும் மீண்டும் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தலாம்.

இன்று ஸ்ரீலங்கா அரசானது ஒதுக்கப்பட்ட தமிழ்க் கும்பல்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அரசின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல .....

கடந்தகாலங்களில் இந்திய அரசு விட்ட அதே தவறுகளைத்தான் ஸ்ரீலங்கா அரசும் செய்யப் பார்க்கிறது வடக்கு- கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் அமைதியை இந்திய அமைதிப்படையினருடன் கூட்டுச் சேர்ந்து குலைத்தவர்களைஒரிஸாவில்இருந்து. அழைத்து வந்து பேசுவது ஸ்ரீலங்கா அரசின் பச்சோந்தித் தனத்தையே எடுத்துக் காட்டுகிறது.

இது தொடருமானால், தற்போதைய தற்காலிக சுதந்திரம் மறைந்து, மீண்டும் ஒரு பூகம்பம் வெடித்தாலும் வெடிக்கலாம்,

இவ்வாறு அவர் பேசினார்.

மூதூர்ப் பிரதேச அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அரசின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். திருமலை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரூபனும் மேற்படி கூட்டத்தில் பேசினார். (இ)

சிகை அலங்கரிப்பாளர்கள்

# சரியாக நடந்து கொண்டால் புலிகளின் தலையீடு இராது

குருநகர், மே 21

சங்கத்தின் கட்டுப்பாடுகளைஏற்றுசகல சிகை அலங்கரிப்பாளர்களும் நடந்து கொண்டால் விடுதலைப் புலிகள் உங்கள் நடவடிக்கைகளில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்படாது.

யாழ் - மனோகரா திரைப்பட மாளிகையில் நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டத்தில் விசேட பிரதிநிதியாகக் கலந்து பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ராஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டம் சங்கத் தலைவர் திரு. சு. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

ராஜன் தொடர்ந்து பேசுகையில் ''சுகாதார வசதிகள் குறைந்த நிலையங்களே எமது பகுதிகளில் இயங்கி வருகின்றன. கூடிய விரைவில் தகுந்த சுகாதார ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் சிகை அலங்கரிப்பாளர்களிடம் கேட்டுக் கொள்கிறார்கள்.

எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் விதத்திலான படங்களை நிலையங்களில் தொங்க விடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். போராட்ட உணர்வுகளை வழிப்படுத்தக் கூடிய படங்களை உங்கள் வீடுகளிலும் கடைகளிலும் தொங்க விடுங்கள்.''

இவ்வாறு அவர் கூறினார் (இ-51)

# வெங்காயம் பருப்பு அவசர இறக்குமதி

கொழும்பு, மே 21

வெங்காயம், பருப்பு ஆகியவற்றை அவசரமாக இறக்குமதி செய்ய கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கொள்வனவுக் கட்டளைகளை நேற்று அனுப்பி வைத்து உள்ளது.

இம்மாதம் முடிவதற்கு முன்னர் இப்பொருள்கள் கப்பல்கள் மூலம்கொழும்பு துறைமுகம் வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது இவற்றுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அரசின் போக்கில் தளம்பல், நேர்மையற்ற நிலை

## நெல்லியடிக் கூட்டத்தில் செங்கதிர்

யாழ்ப்பாணம் மே 21

கடந்த ஒரு வருடமாக நாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்திய போது நாம் நேர்மையான அணுகுமுறையையே கடைப்பிடித்தோம். இதே நிலையையே ஸ்ரீலங்கா அரசும் கடைப் பிடிக்கும் என நாம் நம்பினோம். ஆனால் இன்று அந்த நிலையில் ஒரு தளம்பலும், நேர்மையற்ற போக்கும் இருப்பதை நாம் உணர்கிறோம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதி அமைப்பாளரான செங்கதிர் மேற்கண்டவாறு கூறினார்.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் தென்னிந்திய எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய போதே செங்கதிர் மேற்கண்டவாறு கூறினார்.

இசை நிகழ்ச்சியை கண்டு களிக்க வடமராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக் கணக்கில் மக்கள் வந்திருந்தனர்.

ஆரம்பத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் லூரியா, விடுதலைப் புலிகளின் கலை, கலாச்சாரப் பொறுப்பாளர் புதுவைரட்ணதுரை, வடமராட்சி கலை கலாசார பொறுப்பாளர் சீதா, விடுதலை புலிகளின் மக்கள் முன்னணியாளர் வடமராட்சி அமைப்பாளர் குணம், நெல்லியடி அமைப்பாளர் குணபால், கவிஞர் வாஞ்சிநாதன், ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் தேவரண்ணா உரையாற்றுகையில் எமது இயக்கத்தில் சிறுவர்கள் ஆயுதம் ஏந்தியுள்ளதை கண்டு கேலியாக பேசுகிறோம். ஆனால் இவர்களது அண்ணன்மார் ஆயுதம் ஏந்தி தமிழீழம் பெற்று தந்திருந்தால் இந்த சிறுவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதே என்றார்.

இசை நிகழ்ச்சியை தொடர்ந்து நாடகங்களும் இடம் பெற்றன.

(இ-9-70)



யாழ் மாவட்ட கோட்டக் கல்விப் பிரிவுகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த வியாழன்றுயாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் உரையாற்றுவதை வலது புறப் படத்தில் காணலாம்: போட்டியில் வெற்றி பெற்ற யாழ் கல்விக் கோட்டத்திற்குரிய சுற்றுக் கேடயத்தை அக்கோட்டத்தின் கல்வி அதிகாரி திரு. ஸி. தியாகராஜா திருமதி சுந்தரலிங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதை இடது புறப்படத்தில் காணலாம், உடற்கல்வி அதிகாரி திரு. ரி. அருணகிரிராஜா அருகில் காணப்படுகிறார்.

[படங்கள்:- கே எஸ். ஆர்]

### மாணவிகள் சாதனை

அச்சுவேலி மே 21

அச்சுவேலி புனிதிரேசாள் மகளீர் கல்லூரி மாணவிகள் யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் இரண்டு பரிசுகளைப் பெற்றனர்.

15 வயதுப் பிரிவு மாணவிகளுக்கான குண்டெறிதல் போட்டியில்செல்விபி. மரினா சுபாஜினி முதலாம் இடத்தையும், 17வயதுப் பிரிவுமாணவிகளுக்கான குண்டெறிதல் போட்டியில் செல்வி செ. சசிகலா இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

(க-11)

### வீதிவிபத்து அதிகரிப்பு

மயிலணி, மே 21

சுன்னாகத்தில் சந்தை கூடும் நாட்களில் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இங்கு வீதி போக்குவரத்துக் கட்டுப்பாட்டை உடனடியாக செயற்படுத்த வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ப-98)

## பெண் பிள்ளைகளை பல்கலைக்கழகம் அனுப்ப விரும்பாத பெற்றோர்கள்!

கொழும்பு. மே. 21

பல்கலைக் கழகங்களில் ''ராகிங்'' செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் சொன்னார்.

இதேவேளை ''எங்களது பெண்பிள்ளைகளைஇனிமேல் நாம் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பமாட்டோம்'' என்று பல்கலைக்கழகங்களில் அண்மையில் இடம்பெற்ற'ராகிங்' சேஷ்டைகளால் பாதிப்புற்ற மாணவிகளது பெற்றோர் பொலீஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனராம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 9 மாணவர்கள் ''ராகிங்'' சேஷ்டைகளில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்டதாக அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்தார்.

தாம் இனிமேல் நன்நடத்தை உடையவராக இருப்போம் என்ற உறுதி மொழி கொண்டஒப்பந்தத்தை இவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பொலீஸ்மா அதிபர் பின்னர் பல்கலைக்கழக உபவேந்தரிடம் அவர்களை ஒப்படைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ.ப)

### மல்யுத்தம்

புதுக்குடியிருப்பு. மே 21

மறைந்த வேங்கையின் நினைவாக பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் அண்மையில் மல்யுத்தப் போட்டி ஒன்றை நடத்தியது.

முல்லைத்தீவைச் சேர்ந்த அல்பிரட். யோசப் யூஜிப், மரியராசா சூசைப்பிள்ளை ராஜன் என்போர் சாம்பியன்களாகத் தெரிவாக பிலிப்பையா அன்ரன் சிறிஜீவன் ஆகிய இருவரும் இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

(ப-120)

## 4 ஆயிரம் சொகுசு பஸ்கள் விரைவில் இறக்குமதியாகும்

கொழும்பு, மே 21

தனியார் பஸ் சேவையை சீர் செய்யும் நோக்குடன் நான்காயிரம் சொகுசு பஸ்களை இறக்குமதி செய்து சடன் அடிப்படையில் வழங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தீர்மானித்து உள்ளார்.

இன்னும் சில மாதங்களில் இவ்பஸ்கள் கொழும்பு வந்தடையும் என்று அமைச்சர் சொன்னார்.

) உ - எ)

## தீவுப்பகுதி மங்கையருக்கு பெருமை தரும் முன்மாதிரி

### கட்டடத்திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம் மே 21

''இவ்வளவு பெரிய கட்டடத்தைப் பெண்கள் வியர்வை சிந்திக் கட்டி எழுப்பியது தீவுப்பகுதி மங்கையர் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டியமுன்மாதிரியாகும்''

வடகரம் பொன்அண்ணார் சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் விடாமுயற்சியால் சிரமதான முறையில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய உதவி அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி ஸ்ரெல்லா சிவரெத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மாதர் சங்கத்தலைவர் திருமதி யோ. தவமணி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பங்குத்தந்தை வண.கிருபானந்தன் அடிகளார் இளம் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதன் அவசியத்தை வற்புறுத்தி கத்தோலிக்க அமைப்புகள் செய்யக் கூடிய உதவிகள் அனைத்தையும் பெற்றுத்தருவதாக கூறினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. சிவரெத்தினம் பேசுகையில் மாதர் தொழில் வளர்ச்சியின் மூலம் குடும்பப் பொருளாதாரத்தை வளர்ப்பதுடன் மரணம், நோய் முதலிய உற்பாதங்களால் குடும்பம் அனாதையாகும் போது அவர்கள் பிறர்கையை எதிர்பார்க்காமல். தம்பிள்ளைகளைவளர்க்கலாம் என்றார்.

[க-7]

### சான்றிதழ்

மானிப்பாய், மே 21

யாழ்ப்பாணம்திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் தமக்குரிய சான்றிதழ்களை அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய திறந்த வெளி பல்கலைக்கழக நிர்வாகிதிரு. கே. கருணாகரன் தெரிவித்துள்ளார். (இ-90)

### மீன் உண்ண தயக்கம்

திருகோணமலை, மே 21

திருமலை கடலிலும் மீன் இனங்களுக்கு நோய் கண்டிருப்பதால் மூதூர் பகுதியில் மீனுணவு அருந்தப் பலர் தயங்குகின்றனர்.

இப்பகுதி மீனவர்களும் மீன் வியாபாரிகளும் வருமானம் ஏதுமின்றித்தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

(ப-150)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 - 12 - 1965

மறைவு
01 - 06 - 1989

**செல்வன் இராமலிங்கம் துஷ்யந்தன்**
**திதி: 21 - 05 - 1990**

மின்னல் போல் தோன்றி மறைந்தாயே!
எங்கு சென்றாயோ. நாமறியோம்
நினைத்ததை நிறைவேற்றி முடிப்பவனே
நிலையற்ற தன்மையை உணர்த்தி வைத்தவனே
ஆத்மாவிற்சழிவில்லை மறுபிறவியுண்டு எனநம்பும்
உம்மை என்றும் மறவாத அன்புள்ளங்கள்

அப்பா, அம்மா, அண்ணா
தங்கை, தம்பி, நண்பர்கள்
சுற்றத்தவர்.

651 (373) நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (3606)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி**
**ரதிதேவி பாலச்சந்திரன்**

மலர்வு: 16 - 03 - 1960
உதிர்வு: 21 - 04 - 1990

மாதமொன்று கடந்தாலும் உன்
அன்பு முகம் மறக்கவில்லை
பொன் துலங்கும் முகத்தொளியில் உன்
புன்சிரிப்பு தெரியுதம்மா
ஊரார் போற்றும் உத்தமியாய் - எம்
வழி வந்த எழில் உருவே
உன் நினைவால் வாடும் தாயாரும் சகோதரரும்
வதங்கி நிற்கும் கணவரும் - பிள்ளைகளும்
யார் இங்கு தேற்றிடுவர்
எமது பாசமிகு ரதியே
உன் ஆயுள் முப்பதில் முடிந்தாலும்
எம் ஆயுள் உள்ளளவும் உனை மறவோம்!

21 - 4 - 1990 இல் பிரான்ஸில் காலமான எனது அன்பு மகள் ரதிதேவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் எமது இல்லத்தில் இன்று நடைபெறும் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தாயார்: திருமதி நடராசா,
சகோதரர்கள், மைத்துனர்மார்,
பெறா மக்கள், மருமக்கள்.

அன்னை இல்லம்,
P.W D றோட்,
முல்லைத்தீவு. (13221)

ஒல்லாந்து (HOLLAND) நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விமானம் மூலம் தருவிக்கப்படும்

# ரெட் கிரியோல
(RED CREOLE)

## பெரிய வெங்காய விதை

(ஆகக் குறைந்தளவு 85% விளை சக்தியுடையது)

25 கிலோ பொதிகளில்

இப்பொழுது விற்பனைக்கு கிடைக்கின்றது.

வியாபாரிகளே உங்கள் தேவைகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்:

## ஈஸ்வரன் பிரதர்ஸ்

267, செட்டியார் தெரு,
கொழும்பு - 13.

தொலைபேசி: 422864, 432599, 422744, 431741.

## 43 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**திரு. கந்தையா விஸ்வலிங்கம்**
அவர்கள்

மலர்வு: 26 - 07 - 1910
உதிர்வு: 09 - 04 - 1990

நந்தா விளக்காய் நமையெல்லாம் நடாத்தி
சிந்தை துயர் மிகச் சென்றனை ஐயா!
அருமருந்தாக அணைத்த நின் றனக்குக்
கருமாதி தானும் கழித்திடற் கருகிலோம்
நாளாய்ப் பொழுதாய் நாமெலாம் துயருற
மீளாத் துயிலில் வீழ்ந்தனை ஐயா
நின்றனக் காய நிறை கருமாதி
நன்றே நினைந்து நமதஞ்சலியிலனை
மல்கு மன்புடன் வழங்குகின்றமை
செல்கதி நன்றாய்ச் சிறக்கப் பரவுதும்.

அன்புடையீர்!

இன்று 21 - 05 - 90 ஆம் நாள் நிகழ இருக்கும் எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகளிற் கலந்து அன்னாரின் ஆன்ம நற்கதிக்காகப் பிரார்த்திக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

அன்புள்ள
மனைவி:- திருமதி விஸ்வலிங்கம்
பிள்ளைகள்:- பரமேஸ்வரி,
பத்மநாதன் - பிரான்ஸ்,
பரமநாதன் - பிரான்ஸ்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''வேளாவை''
அளவெட்டி வடக்கு. [3581]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஷப்றா கிண்ண கிரிக்கெட்:

# ஜொலி ஸ்ரார்ஸ், ஜொனியன்ஸ் இறுதிப் போட்டிக்குத் தகுதி!

யாழ்ப்பாணம், மே 21
ஷப்றா யுனிகோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் ஆதரவுடன் 'ஷப்றா' கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தின் இறுதிப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும்.

இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ், ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிகள் மோதவிருக்கின்றன.

பத்தொன்பது கழக அணிகளுக்கிடையில் நொக்கவுட் முறையில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

காலையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ் சென்ரலைட்ஸ் (சொக்ஸ்) அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் அணி 28 3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சாந்திஹரன் 24, விவேகானந்தன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். புரட்சிதாசன் வேகமாக விளாசி அடித்து 23 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

சூரியகுமார் 3 விக்கெட்டுக்களையும், மகிந்தா, சஞ்சீவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 26.5 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

சஞ்சீவன் 44, சுரேன்குமார் 34, முரளிதரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பாலகுமார், விவேகானந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

மாலையில் நடைபெற்ற மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார்ஸ் அணி வட்டுக்கோட்டை நியூ கோல்ட்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களினால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூகோல்ட்ஸ் அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களையே பெற்றது.

ஜனார்த்தன் 40, விஜயகுமார் 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரி. பிரபாகரன் 3, எம்.எஸ். தயாளன் 2, சசிசேகரன் 2, விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஜொலிஸ்ரார்ஸ் அணி 23.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

நரேந்திரன் ஆட்டமிழக்காமல் 46, வரதன் 26, ரி. பிரபாகரன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

நித்தியராஜன் மூன்று விக்கெட்டுக்களையும், ஜனார்த்தன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.
(உ-மு)

## கொழும்பில். . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளும் இன்று காலையில் நடைபெற மாட்டாது என்றும்-

கொழும்பு கோட்டையிலிருந்து இந்த இடங்களுக்கான இரவு தபால் ரயில் சேவை இன்று வழமைபோல் புறப்படும் என்றும்-

ஆனால் காங்கேசன்துறை, தலை மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து கொழும்புக்கான இரவுரயில் சேவை இன்று நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மேற்பார்வை--

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாடிக்கட்டடம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விஞ்ஞானக் கல்வியை பொறுத்தவரை பல உபகரணங்களை பாவிக்காமலே எமது பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெறுகிறார்கள். இதனை மேலும் அதிகரிக்க செய்யும் முகமாக 20,000 ரூபா பணம் விஞ்ஞான உபகரணங்கள் தயாரிப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி முன்னேற்றத்துக்கென கல்வி ஆலோசனைக் குழு ஒன்றினை வடமாநிலம் முழுவதுக்குமாக இன்னும் ஓரிரு வாரங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது.

எண்பது வீதமான வரவை கொண்டிராத மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்கான வகுப்பேற்றத்தை செய்ய வேண்டாம் என அதிபர்களை கேட்டுக் கொள்கிறேன். மாலைப் போதனை வேலைகளில் தொடர்ந்து பத்துநாட்களுக்கு சமுகமளிக்காத மாணவர்களின் பெயர்களை வரவுப் புத்தகத்தில் இருந்து நீக்கிவிடுங்கள்.

வடமாநிலம் கல்வியில் சிறந்து விளங்குவது என்ற பாரம்பரியநிலைப்பாடுஇன்று மாறியுள்ளது. வடமாநிலம் கல்வியால் மீண்டும் மேம்பட சகல அதிபர்களும் ஆசிரியர்களும் பிரயாசப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரனும் உரையாற்றினார்.
[இ-90

## எந்த நேரத்திலு-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி என்பவற்றின் அடிப்படையில் நாம் போராட்டத்தைத் தொடர்கிறோம்.

யுத்தம் வராதுஎன்று நினைத்து இருக்கும் எம்மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதை எதிர்த்து முறியடிக்கும் சக்தி எம்மிடம் உண்டு.

இந்தியப்படை வந்தபோது எமது தலைவர் பிரபாகரன் எந்த நேரத்திலும் இந்தியப் படையினர் எம்மீது யுத்தம் ஒன்றைத் திணிப்பார்கள் என்று கூறிவந்தார். வந்த யுத்தத்தை எதிர்த்து இரண்டு வருடம் போராடி வெற்றி கண்டோம்.

நாம் எம்மைப் பலப்படுத்துவதன்மூலம் திடீர் தாக்குதலை முறியடிக்க முடியும். நாம் பலமாக இருந்தால் சில சமயத்தில் யுத்தத்தைத் தவிர்க்கவும் முடியும்.

பருத்தித்துறையில் சிங்களப் பொலீசார் பெண்களிடம் சேட்டைவிட்டசமயம், எமது போராளிகள் பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். அச்சமயம் பொலீஸ் நிலைய அதிகாரி பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி நமுனியிடம் உடனடியாக சுஜபாகு ரெஜிமண்டைஅனுப்பும்படி கேட்டார். புலிகள் பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ளனர். அதனால் படையை அனுப்பமுடியாது என்று அவர் கூறினார். நாம் பாதுகாப்பாக இருந்ததால் தான் அன்று யுத்தத் திணிப்பைத் தவிர்க்க முடிந்தது.

இன்று கடைசியாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் ஆனையிறவில் படைகள் குவிக்கப் டுகின்றன. எந்த நிமிடத்திலும் எம் மீது யுத்தம் திணிக்கப்படலாம். அதை எதிர்த்து நாம் முறியடிப்போம்--என்றார் அவர்.

ஆரம்பத்தில் போராளிகளின் உருவப் படங்களுக்கு மாலை சூட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து இருநிமிடம் மௌனாஞ்சலி இடம் பெற்றது.
[அ-3]

## இராம-- -

யையும் கல்விப் பணிப்பாளர் சென்று பார்வையிட்டார்.

ஆண்டுவிழாவையொட்டி கொத்தணிப் பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகளும் இசை நடன ஆசிரியர் கலை நிகழ்ச்சிகளும்நடைபெற்றன.
(இ-90)


## அதிஷ்ட லாபச் சீட்டு

கடந்த 09-05-1990இல் அதிஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு சிறு தவறுகளின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

இச்சீட்டிழுப்பு மீண்டும் நாளை 22-05-1990 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நாயன்மார் கட்டு இராமநாதன் வீதியில் உள்ள ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் அதிஷ்டம் பார்க்கப்படும். இத்துடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

பொதுமக்களை இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

**Europe China Hotel,**
**JAFFNA.** [13259]


## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 22.00-24.00 | ரூ. 18.00-24.00 | ரூ. 22.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10 00 | ரூ. 6.00- 7.50 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 14.00-18.00 | ரூ. 12.00-16.00 |
| பாகற்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 14.00-16 00 | ரூ. 18.00-20.00 |
| கோவா | ரூ. — | ரூ. 12.00-14.00 | ரூ. 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. — | ரூ. 22.00-24.00 | ரூ. 22.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 20.00-22.00 | ரூ. 18.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 6.00- 8.00 | ரூ. 8.00-10.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 20.00-22.00 | ரூ. 24.00-28.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 4.00- 4.50 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 22.00-24.00 | ரூ. 16.00-17.00 | ரூ. 22.00-24.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 40.00-50.00 | ரூ. 38.00-45.00 | ரூ. 50.00-55.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 35.00-42 00 | ரூ. 28 00-35.00 | ரூ. 40 00-45.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 29.00-32.00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8.00-10.00 | ரூ. 9.00-11.00 | ரூ. 11.00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 18.00-19.00 | ரூ. 16.00-20.00 |

## ச்கல பாட. .

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநில கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன். பொ. சிவஞானம் விழாவுக்குத்தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

மனித உரிமைகளை உடனடியாகப் பாதுகாக்கும் நோக்குடன் பாதசாரிகள் கடவையை அமைப்பதையும் நீண்டநாள் நிலைத்துநின்று பாதுகாப்புத் தரக்கூடிய மரங்களை நடுவதையும் எமது சேவையின் இருதிட்டங்களாக்கி இன்று செயற்படுத்துகின்றோம்.

சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஆரம்பித்து தனது முதல் நடவடிக்கையாகஇதனை அமைத்துள்ளது.

இப்படி அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக நிழல் மரங்கள் நடும் வைபவம் நடைபெற்றது.

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா, கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் ஆகியோர் நிழல் மரங்களை நட்டனர்.
(இ-89-90)

## இன்றைய - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படை, எமது பலம், எமது போராட்டம் என்று நாம் எமது சொந்தக் காலிலேயே நிற்கிறோம்.

ஆனால் மலையக மக்கள் பிரதேசரீதியாக வேறுபடுத்தப்பட்டு இலங்கை அரசால் இராணுவ அடக்குமுறைக்கும், இனவாதத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். அவர்கள் பிரச்சனைகளைப் பற்றி நாம் குரல் கொடுக்க வேண்டியது அவசியம்.

மலையக மக்கள் வாக்குரிமை, பிரசாஉரிமைப் பிரச்சினை போன்றவைக்காகத் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் பிரச்சினை என்ன, அவர்கள் யார் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இராணுவ பயங்கரவாதத்தால் பாதிப்புக்குள்ளாகும் அந்த மக்களின் பிரச்சினைகளை அறிவுபூர்வமாக, உணர்வுபூர்வமாக உணர்ந்து செயற்படவேண்டும். அவர்களது போராட்டத்துக்கு ஆதரவாக நடைபெறும் ஹர்த்தாலுக்குச் சகலரும் ஆதரவு வழங்கவேண்டும் — என்றார்.
(அ-3)

## சிறையிலிருந்த--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறி வந்த இவர்களை தமிழகப் போலீஸார் பாஸ்போட் சட்டத்தின் கீழ் கைது செய்திருந்தனர்.

அகதிகள் முகாம் ஒன்றுக்குத் தம்மை அனுப்பி வைக்குமாறு கோரி அவர்கள் சிறைச்சாலைக்குள் உண்ணாவிரதம் இருந்ததை அடுத்து சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு மண்டபம் கொட்டப்பத்து அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
(இ-எ)

## ஐக்கிய முன்னணியில் நெருக்கடி

சுதந்திரக் கட்சி தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டு உள்ள ஐக்கிய முன்னணியில் நெருக்கடி ஏற்பட்டு இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில சுதந்திரக் கட்சி தனித்தே போட்டியிடவேண்டும்; வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடக் கூடாது. இபபடி பதில் எதிர்க்கட்சித் தலைவரான திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

இதுவே இந்த நெருக்கடிக்குக்காரணம் என்று சொல்லப்படுகிறது.

இப் புதிய ஐக்கிய முன்னணியில் சுதந்திரக் கட்சியுடன் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யுனிஸ்ட்கட்சி, தேசவிடுதலை மக்கள் கட்சி, திருமதி சந்திரிகா தலைமையிலான ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி ஆகியன அங்கம் வகிக்கின்றன.

## அதிகரிப்பு

ஒரு லீற்றர் பாலின் விலை அடுத்த மாதத்திலிருந்து 80 சதத்தால் அதிகரிக்கப்படும். இதன்படி பாற்பண்ணையாளர்கள் 1லீற்றருக்கு 6ரூபா 80 சதத்தை பெற்றுக் கொள்வார்களென கால் நடை அபிவிருத்தி பால் உற்பத்தித் துறை அமைச்சர் மகேந்திர விஜயரத்ன தெரிவித்தார்.
[இ-7]

## 10 பேர் மரணம்

பாகிஸ்தான் நகரான லாகூரில் வண்டில் ஒன்றில் வைக்கப்பட்டு இருந்த குண்டு ஒன்றுவெடித்ததில் 10 பேர் மரணமடைந்தனர்.

இதற்கு முன்னர் லாகூரில் ரயில் பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் 17 பேர் மரணமடைந்தனர் என்பதும் தெரிந்ததே!
(எ)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 21
அமெரிக்க தகவல் சேவை யாழ் பொது நூலகத்துடன் இணைந்து நடத்தும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசாவின் ''அமெரிக்க உயர்கல்வித் துறையில் நிகழும் மாற்றங்கள்'' புத்தகக் கண்காட்சி 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

24, 25, 26 ஆம் திகதிகளில் பொதுமக்கள் இக்கண்காட்சியைப் பார்வையிடலாம்.

அமெரிக்க மாணவர்களின் கல்விமுறைகள், அமெரிக்காவில் கல்விபயிலும் ஏனைய நாடுகளின் மாணவர்களின் கல்விமுறை போன்ற பலவிடயங்கள் 300 தலைப்புகளில் நூல்களில் ஆராயப்பட்டுள்ளன.
(இ-7)


## தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்

தமிழில் பாண்டித்தியமும், தமிழ்ச் சுருக்கெழுத்தில் தேர்ச்சியும், நிறைந்த அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மூன்று வருடங்களுக்குக் குறையாத சுருக்கெழுத்து தட்டெழுத்து அனுபவமும், நிமிடத்துக்கு 80 சொற்களுக்கு மேல் கையாளக்கூடிய திறமையும் உள்ளவர்களுக்கே முன்னுரிமை தரப்படும். கடிதங்களை சுயமாக வடிவமைப்பதில் அனுபவம் இருந்தால் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

ஆங்கில சுருக்கெழுத்து / தட்டெழுத்து தெரிந்தால் விசேட தகமையாகக் கருதப்படும்.

பூரண சுய விவரங்களைத் தெரிவித்து 30-5-1990க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்:

**ஆளணி முகாமையாளர்,**
**நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிரைவேட்] லிமிட்.**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்

21 - 05 - 1990 திங்கட்கிழமை




# எந்தவித அச்சுறுத்தல்களையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டும்

## சாவகச்சேரிக் கூட்டத்தில் தினேஸ்

கைதடி, மே 21

இப்போதுள்ள சமூக நிலையைக் கொண்டு எமக்கு எல்லாம் கிடைத்துவிட்டன என்று நினைக்கக்கூடாது, இனித்தான் எமக்கு அச்சுறுத்தல்கள் உண்டு ஆகையால் எந்த அச்சுறுத்தல்களையும் மக்கள் துணிவுடன் எதிர்கொள்ளவேண்டும். எமது விடுதலைப் புலிகள் இயக்கத்தை வளர்த்தவர்கள் நீங்களே. ஆகையால் எந்த அச்சுறுத்தல்களையும் எதிர்க்கத் தயாராகுங்கள் எமது இலட்சியம் நிறைவேறும்வரை எம்முடன் ஒத்துழையுங்கள்.

சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ் மேற்கண்டவாறு கூறினார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு தினேஸ் மேலும் பேசியதாவது:-

மக்களின் உறுதியான நிலைப்பாட்டினால் அந்நிய வல்லாதிக்கத்தையும், துரோகக் கும்பலையும் துரத்தினீர்கள் ஆனால் இலங்கைஅரசு மீண்டும் துரோகக் கும்பலை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துகிறது. ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் விழிப்பாயிருங்கள். எந்தக்கட்டத்திலும் எதையும் செய்யத் தயாராகுங்கள்.

இப்படி அவர் கூறினார்.

இக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில், இந்திய இராணுவம் வந்து இங்கே கொலைவெறியாடிவிட்டுப் போக அதே நாட்டைச் சேர்ந்த ஒருகலைஞர் எம் இயக்கப் பாடலைப் பாடுகிறார் என்றால் அவரது தமிழ்ப் பற்று எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை எம்மால் உணரக் கூடியதாக இருக்கிறது என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அமுதினி பேசுகையில், நாம் எமது விடுதலையை நோக்கி, சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றோம். இது மக்கள் போராட்டமாக மலர வேண்டும். இலங்கை அரசிடம் நாம் போராட ஆரம்பித்ததும் எமது தலைவர் கூறியதுபோல எமது போராட்டத்தின் வடிவம் மாறலாம் ஆனால் எமது இலட்சியம் மாறாது, என்றார்

கலை கலாசார பிரிவு பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை பேசுகையில், கடந்த இரண்டரை வருடம் இரகசியமாகக் கேட்ட தேனிசை செல்லப்பாவின் பாடல்களை கடந்த 5 மாத காலமாக பகிரங்கமாகக் கேட்கிறீர்கள். திரு. செல்லப்பா சென்னை தொலைக்காட்சியிலும், சென்னைவானொலியிலும் பதிவு செய்யபபட்ட ஒரு கலைஞர், ஆனால்எமது இயக்கத்துடன் தொடர்பு பட்டிருப்பதால் அங்கு புறக்கணிக்கப்பட்டார் என்றார்.

தென்மராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு. குணா திரு. செல்லப்பாவுக்கு தங்கப் பதக்கம் சூட்டி கலைஞர்களுக்கும் அன்பளிப்புகளை வழங்கினார்.

தென்மராட்சி மகளிர் இராணுவப் பொறுப்பாளர்செல்வி அமுதினியால் பாடகி சொர்ணலதா, திரு. செல்லப்பாவின் மகள் சாந்தி ஆகியோருக்கு தங்கப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. திரு. ஏ. வி. உலகநாதனது நன்றி உரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. (இ-51-74)

## பெயர் தவறு

இம்மாத ஆரம்பத்தில் கொழும்பில் நடந்த மேதின விழாக்களில், ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பும் சேர்ந்துகொண்ட விழாவை அரசாங்க லிகிதர் சேவைச்சங்கமே நடத்தியது.

அந்த மேதின விழாவுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அறிவிக்கிறது.

இம்மாதம் இரண்டாம் திகதி வெளியான உதயனில், அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் என்ற பெயருக்குப் பதிலாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் என்ற பெயர் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. [அ]

## விரும்பிய மொழியில் பரீட்சை

அரசபதவிக்கு விண்ணப்பிப்போர் தாம் விரும்பிய மொழியில் பரீட்சைஎழுதலாம்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கை சரிவர அமுல்நடத்தப்படுகிறதா என்பதை திணைக்கள மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள் கவனித்துக்கொள்வர். (இ எ)

## புதிய விடுதி

நெடுங்கேணி மே 18

பாரிய நீர்பாசனத் திணைக்கள உத்தியோகத்தருக்கான விடுதிச்சாலை ஒன்று நெடுங்கேணியில் 2 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றது. (இ-108)

## நிராகரிப்பு

ஐக்கிய சோஷலிச அணியின் கூட்டம்ஒன்றைக் கூட்டும்படி ஸ்ரீலங்காமக்கள் கட்சிவிடுத்த கோரிக்கையை கம்யூனிஸ்ட் கட்சியும்லங்கா சமசமாஜக் கட்சியும் நிராகரித்து விட்டன.

ஐ சோ. அணியின் செயற்குழுக் கூட்டம் வாராந்தம் ஒரு தடவை கூடுவது வழக்கம் இக்கூட்டம் கடந்த 2 மாதங்களாக நடைபெறவில்லை. (சி-எ)

# ஆறாவது திருத்தம் உள்ளவரை அரசியல் நீரோட்டத்தில் பங்கில்லை

## கட்டை பறிச்சான் கூட்டத்தில் யோகி

திருகோணமலை, மே 21

ஆறாவது சட்டத் திருத்தம் இருக்கும் வரை நாம் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள மாட்டோம் இதில் எந்தவிதக் குழப்பமும் எமக்குக் கிடையாது.

கட்டை பறிச்சானில் நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது.

நாம் அரசினைக் கேட்பதெல்லாம், இந்தச் சட்டத் திருத்தத்தை நீக்குவதற்காக விரைவில் நடவடிக்கை எடுங்கள் என்பது தான்.

நாடாளுமன்றத்தில் இச்சட்டத் திருத்தத்தை நீக்குவதற்கான பிரேரணையைக் கொண்டு வரும்போது யார், யார் என்னென்ன நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

இச்சட்டத் திருத்தத்தை நீக்குவதில் தோல்வி ஏற்பட்டால் அது எவரால் என்பதையும் புரிந்துகொள்ள முடியும். அது மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை என்பதையும் அது இனம்காட்டிவிடும்.

இந்தச் சட்டத்தைத் திருத்த இந்தப் நாடாளுமன்றத்துக்கு முடியாவிட்டால் இந்த நாடாளுமன்றத்தால் வேறு எதையுமே பெரிதாகச் சாதித்துவிடவும் முடியாது.

இன்று பலம் பொருந்திய அமைப்பாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி விளங்கிவருகிறது. இது இந்துக்களின் அமைப்போ, கிறீஸ்தவர்களின் அமைப்போ, அல்லது முஸ்லீம்களின் அமைப்போ அல்ல. இது தமிழ் பேசும் மக்களின் விடுதலை அமைப்பாகும். இந்த அமைப்பின்கீழ் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார். [இ]

## தொழில் நுட்ப நிறுவனத்தின் கலைவிழா

யாழ்ப்பாணம், மே 21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரித் தொழில் நுட்ப நிறுவன மாணவர் மன்றத்தின் வருடாந்தக் கலை விழா எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடக்கவுள்ளது.

நிறுவனத்தின் ஒபெல்ஸ் அரங்கில் அன்று காலை 9 மணியிலிருந்து பி. ப. 3 மணி மணிவரை நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரும், பிரபல கவிஞருமான திரு. இ. முருகையன் அவர்களும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

விழாவுக்கு மன்றத்தலைவர் திரு எஸ். செல்வகுமார் தலைமைவகிப்பார். [அ]

## சுற்றுலா

யாழ்ப்பாணம். மே 21

உடுப்பிட்டி 'பீக்கன்' தனியார் கல்வி நிலையத்தைச் சேர்ந்த சுமார் 350 மாணவ மாணவிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் கல்விச் சுற்றுலாஒன்றை மேற்கொண்டு உதயன் அலுவலகத்துக்கும் வந்திருந்தனர்.

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை, காங்கேயன் துறைமுகம், காரைநகர் கசூரினா பீச், கீரிமலை, யாழ். கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர். [இ]

# சகல பாடசாலைகள் முன்பும் பாதசாரிகள் கடவை வேண்டும்

## லயன்ஸ் கழக வைபவத்தில் உரை

மானிப்பாய், மே 21

'மனித குலத்தின் மேம்பாடு கருதி செயற்பட்டுவரும் லயன்ஸ் கழகத்தினரின்சேவை பாராட்டுக்குரியது. இங்கு அமைக்கப்பட்டது போன்று சகல பெரிய பாடசாலைகள் முன்பாகவும் பாதசாரிகள் கடவைகளை அமைத்துக்கொடுக்க லயன்ஸ் கழகம் முன்வர வேண்டும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்ட பாதசாரிகள் கடவையைத் திறந்து வைத்து உரையாற்றிய வட

[7ஆம் பக்கம் பார்க்க]

# இஸ்லாமிய மாநாடு இன்று

கொழும்பு மே 21

தெற்காசிய நாடுகள் பங்கு பற்றும் மூன்றாவது சர்வதேச இஸ்லாமிய மாநாடு இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா ஆரம்பித்து வைப்பார்.

20 தெற்காசிய நாடுகளை சேர்ந்த250பிரதிநிதிகள்இதில் பங்கேற்பர். நவீன சவால்களை எதிர் நோக்குவதில் இஸ்லாமியத் தலைவர்களின் பங்குஎன்பதுஇம்மாநாட்டின் கருப்பொருளாகும்.

உலக இஸ்லாமிய சங்கம் இதனை ஒழுங்கு செய்திருக்கிறது.

லிபியத்தலைவர் கேர்ணல் முஅம்மர் கடாபியின் விசேட தூதுவராக1987 ஆம்ஆண்டில் இலங்கை வந்த சங்க செயலாளர் டாக்டர் முகமத் அகமத் மற்றும் ஏனையமுஸ்லிம்நாடுகளது அறிஞர்கள் கல்விமான்கள் இதில் கலந்து கொள்கிறார்கள். (ப)

# வெங்காய விளைச்சலுக்கு புதியகிருமிநாசனி அறிமுகம்

## நேற்றைய கருத்தரங்கில் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 21

வடபகுதியில் வெங்காயச் செய்கை தாள் கோதிப் புழு என்ற ஒருவகைப் புழுவால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகிறது. இதனைக் கட்டுப்படுத்தி விளைச்சலை இலாபகரமான தாக்கும் நோக்கில் அங்லோ ஏசியன் பேர்டிலை ஸர்ஸ் என்ற இரசாயனப் பசளை தயாரிப்புநிறுவனம் சுமிசிடின் சுப்பர் ஈ சி. என்ற புதிய பூச்சிநாசினியை அறிமுகப்படுத்தியுள்ளது.

பசைத் தன்மை கொண்டதான இம்மருந்து செடிகளில் தெளிக்கப்பட்டபின் அதிக நாட்களுக்கு தாக்கம் குறைவடையாமல் பயனளிக்கும் எனவும் மழை, பனி இவற்றால் இது இலகுவில் கழுவிச் செல்லப்படாமல் இலைகளில் ஒட்டுண்டு இருக்கும் எனவும் இந்நிறுவனத்தினர் நேற்று யாழ்நகரில் அசோக் ஹோட்டலில் நிகழ்த்திய கருத்தரங்கில் அறிவுறுத்தினர்.

நிறுவனத்தின் யாழ் பிராந்திய விற்பனைப் பொறுப்பதிகாரி திரு ஆர். மகேஸ்வரன் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களது சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கங்களைத் தந்தார். மற்றும் திரு. ரேமண்ட் பெர்னான்டோ, திரு. எஸ். டபிள்யூ தங்கராஜா ஆகியோர் இதில் உரையாற்றினர். (இ-ப)

## மனையியல் கூட உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மே 21

யாழ் மாவட்டத்தில் 20 கிராமப் புறப்பாடசாலைகளுக்கு மனையியல்கூட உபகரணங்கள் கல்வி அலுவலகத்தால் வழங்கப்படவிருக்கின்றன.

இந்தப் பாடசாலைகளுக்கு மனையியல் கல்விக்கு வழங்கும் உதவி நிதியை பணமாக வழங்காது உபகரணங்களாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

# வடமராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சிப் பகுதியில் மூன்று ஆரம்பசுகாதார நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ்-செஞ்சிலுவைச் சங்கத்தால் இந்த நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி, தம்பாலைஆகியஇடங்களிலேயே இவை அமையவிருக்கின்றன. (இ-3)

# இவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடமாற்றம்

கொழும்பு. மே 21

குடியகல்வு, குடிவரவு திணைக்களம், சுங்கத்திணைக்களம் மற்றும் விமான நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறைஇடமாற்றம் செய்ய வேண்டும்.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவிட்டார்.

குடியகல்வு. குடிவரவு திணைக்களம், சுங்கத்திணைக்களம் ஆகியவை இனித்திறந்த சேவையாக இருக்கும்.

ஏனைய அரசுத் திணைக்களங்களின் ஊழியர்களும் இச்சேவைகளில் சேர்ந்து பணி புரிய சந்தர்ப்பம் வழங்கப்படும்

அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸாசொன்னார். [இ-எ]

## லோங் அடிகள் ஞாபகார்த்த பேருரை

யாழ்ப்பாணம், மே 21

பிதா லோங் அடிகளாரின் ஞாபகார்த்த பேருரை நிகழ்ச்சி நாளை 22 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், பேராசிரியர் நேசையா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (3)

# 200 ஆசிரியர்கள் ஜூலையில் யாழ். மாவட்ட இடமாற்றம்

யாழ்ப்பாணம் மே 21

வெளி மாவட்டங்களில் இருந்து 200 ஆசிரியர் எதிர்வரும் ஜூலை முற்பகுதியில் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சில் தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இடமாற்றச் சபை மூலமாக இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் முடிவாக்கப்பட்டன.

இந்த இடமாற்றப்பட்டியல் கல்விப்பணிப்பாளருக்கு சமர்பிக்கப்பட்டது. அவரது அங்கீகாரத்துடன் தற்சமயம் இடமாற்றப்பட்டியல் தயாரிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஜூலை மாத முற்பகுதியில் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும், வெளி மாவட்டங்களில் ஐந்து வருடத்துக்கு மேல் கடமையாற்றியவர்களே இடமாற்றப்பட்டியலில் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதிசின்னத்துரை சிவபாக்கியம்

பண்டத்தரிப்பு வடலியடைப்பைச் சேர்ந்த திருமதி சி. சிவபாக்கியம் 20-05-1990 அன்று காலமானார்.

இவர் சின்னத்தரையின் அன்பு மனைவியும், நாகபூஷணி, தனபாலசிங்கம் (முல்லைத்தீவு பிரதேச அபிவிருத்தி உப அலுவலகம்), குணபாலசிங்கம் (நீர்ப்பாசன இலாகா, முருங்கன்), கனகரத்தினம் (ஜேர்மனி), செல்வரத்தினம் (நீர்ப்பாசன இலாகா, வவுனியா), சரோஜினிதேவி (ஜேர்மனி), பத்மாதேவி, குலரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணபவன், திரிபுரசுந்தரி, அனுசியா, மகாசக்தி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம் சென்ற நவரத்தினம் மற்றும் மாணிக்கம், பாக்கியம், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 22-05-1990 செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. தனபாலசிங்கம்

''தணிகை''
புத்தடி வீதி,
பண்டத்தரிப்பு.

[13261]

## பஸ்தியாம்பிள்ளை [செல்லையா] நிக்கலஸ்

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

மிருசுவிலைச் சேர்ந்த திரு. பஸ்தியாம்பிள்ளை நிக்கலஸ் காலமானார்.

இவர் 17-1-90 இல் காலஞ்சென்ற திருமதி மேரி றோசம்மா (இளைப்பாறிய ஆசிரியை) வின் அன்புக் கணவரும், ஜெயரட்ணம், பவளக்கொடி, ஜெயசிங் (மிருசுவில் G.T.M.S. பாடசாலை), ஜெயக்கொடி (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), புஷ்பக்கொடி (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகறாணி, மார்சலின் (உள்ளகக் கணக்காளர், இ.போ.ச. கோண்டாவில்), மரியறாஜேஸ்வரி (திருகோணமலை சென். மேரிஸ் பாடசாலை), மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புச் சகோதரனும், அருட்சகோதரி சென்போல் (தி. கு. க. யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மரியராசரத்தினம், ஸ்ரனிஸ்லோஸ் (இளைப்பாறிய பிரதம லிகிதர், சௌக்கிய சேவை சாவகச்சேரி) ஆகியோரின் அன்புமைத்துனரும், பவளக்கோன், விமலக்கோன், தென்னக்கோன். றூபன், சுரன், நேசக்கோன், தனுஷா, சஜீவன், கிறிஸ்ரி, ஜெனோஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 22-05-1990 செவ்வாய் காலை ஒன்பது மணிக்கு மிருசுவிலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
B. J. மார்சலின்

மிருசுவில். [13252]

## தமிழக பொலிஸாருக்கு

# ஏ. கே 47 ரக ரைபிள் பாவிப்பதற்கு பயிற்சி

மதுரை, மே 21

தமிழக மாநில பொலிஸாருக்கு ஏகே 47 ரக ரைபிள் பாவிக்கும் பயிற்சி அளிக்கப் படருவிக்கிறது.

இதற்காக மத்திய அரசு அதிகாரிகள் மாநிலத்துக்கு வரவிருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் முகாம்கள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை. அவர்கள் ஆயுதங்களுடன் நடமாடவும் எனது அரசு அனுமதிக்காது.

இலங்கையில் குடிபெயர்ந்து இந்தியா வந்துள்ள தமிழ் அகதிகளை அந்தமானில் குடியமர்த்த வேண்டும் என்ற யோசனையை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்-

இப்படி திரு கருணாநிதி தெரிவித்தார். [இ-எ]

## முல்லைத்தீவில் மலேரியா

முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவுப் பகுதியில் மீண்டும் மலேரியா நோய் பரவியுள்ளது பெரும்பாலான மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

செல்வபுரம், வட்டுவாகல், வெள்ளா முள்ளி வாய்க்கால், முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய பகுதிகளில் சுகாதாரப் பகுதியினரால் மலேரியா தடுப்பு மருந்து [illegible] வருகின்றது. [illegible]

## அரச துறைகளில் உள்ள

# 5 ஆயிரம் வெற்றிடங்கள் 3 மாதத்தில் நிரப்பப்படும்

கொழும்பு மே 21

அரசுத் துறையில் உள்ள 5 ஆயிரத்துக்கு அதிகமான வெற்றிடங்களை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிரப்பும்படி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா உத்தரவிட்டிருக்கிறார்.

அமைச்சுச் செயலாளர்கள் கூட்டம் ஒன்றில் அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவையில் 293 இடங்களும் [illegible] எழுது வினைஞர் தரத்தில் 4 ஆயிரத்துக்கு அதிகமான இடங்களும்காலியாகஉள்ளன.

இவ்வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். போட்டிப் பரீட்சை மூலம் அனைவரும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இந்த அடிப்படையை விடுத்து வேறு எவ்வகையிலும் நியமனம் வழங்கப் படக் கூடாது. இப்படி அமைச்சர் உத்தரவிட்டார். வெற்றிடங்கள் பற்றிய விபரங்கள் பொதுசாதனங்கள் மூலம் அறிவிக்கப்பட உள்ளன. (இ - எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org